வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
பக்கங்கள் : 16
விலை ரூ. 20/=
ஈழநாடு
Eelanadu
14.01.2021 வியாழக்கிழமை




# தீர்வு இல்லையேல் நாடு நாசமடையும்!

## தைத்திருநாளில் அரசுக்கு சம்பந்தன் எச்சரிக்கை




கொழும்பு, ஜனவரி 14

"இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு காணப்படாவிட்டால் நாடு நாசமடையும்."

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் நாளிலேயே அவர் இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

02






## இலக்கண விருது பெறுகிறார் பேராசிரியர் சண்முகதாஸ்

யாழ்ப்பாணம், ஜன. 14

உலகத் தமிழ்ச்சங்கத்தின் இலக்கண விருது பெறுகிறார் பேராசிரியர் அ.சண்முகதாஸ்.

தமிழ்நாடு அரசு உலகத் தமிழ்ச்சங்கம் மதரையின் சார்பில் இலக்கியம், இலக்கணம் மற்றும் மொழியியல்துறைகளில் சிறந்து விளங்கும் அயலகத் தமிழறிஞர்கள் மூவருக்கு ஆண்டு தோறும் உலகத் தமிழ்ச் சங்க விருதுகள் வழங்கப்படுகின்றன.

அதன் அடிப்படையில் 2020ஆம் ஆண்டுக்கான உலகத் தமிழ்ச்சங்க இலக்கண விருது யாழ்ப்பாணத்

02

### இலங்கையில் முகநூல் பதிவுக்காக

## கைதான தமிழ் ஊடகவியலாளரை விடுவிக்க கோருகிறது ஆர்.எஸ்.எவ்.




பாரிஸ், ஜன. 14

முகநூல் பதிவுக்காகக் கைது செய்யப்பட்டு சிறைவைக்கப் பட்டிருக்கும் இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒருவரை உடனடியாக விடுதலை செய்யுமாறு பாரிஸை தள

02

## சிங்க வேடமிட்ட நரிகளிடம் சிங்களவர் ஏமாறமாட்டார்கள்

### அஸாத் சாலியை சாடுகிறார் பியல் நிஷாந்த

கொழும்பு, ஜன.14

சிங்கம் போன்று வேடமிட்டுள்ள அரசியல் நரிகளின் கருத்துக்களுக்கு புத்திசாலிகளான சிங்களப் பெரும்பான்மையின மக்கள் ஏமாறமாட்டார்கள். அஸாத் சாலி போன்ற அரசியல்வாதிகள் சிங்கள - முஸ்லிம் சமூகங்களுக்கு இடையில் இனவாதத்தை ஏற்

02

## முடக்கப்பட்ட உக்ரைனிலிருந்து 1,184 பேர் இலங்கைக்கு வருகை

கொழும்பு,ஜன.14

கொரோனா வைரஸ் தொற்று தீவிரமடைந்த நிலையில் உக்ரைன் நாடு முடக்கப்பட்டுள்ள நிலையிலும் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 28 ஆம் திகதியிலிருந்து தற்போதுவரை 1,184 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

02

## நேற்று ஒரேநாளில் மட்டும் 687 பேருக்கு கொரோனா!

### 50 ஆயிரத்தை தாண்டியது தொற்றாளர் எண்ணிக்கை

கொழும்பு, ஜன.14

இலங்கையில் நேற்று மட்டும் 687 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்

02

## தனக்கு இரு பக்கங்கள் உண்டென நிரூபித்திருக்கின்றார் ஜனாதிபதி

### ஹர்ஷ டி சில்வா கடும் சாடல்



கொழும்பு,ஜன.14

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தனக்கு இரு பக்கங்கள் உள்ளன எனக் கூறிய தற்கமையவே செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். இதன் காரணமாகவே மக்கள் மத்தியில் கொழும்பு துறைமுக கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்கவில்லை என்று மக்கள் மத்தியில் கூறிவிட்டு அதற்கான அமைச்சரவைப் பத்திரத்

02

## கொலை வழக்கிலிருந்து பிள்ளையான் விடுதலை


மட்டக்களப்பு, ஜன.14

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை வழக்கிலிருந்து தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) உட்பட ஐந்து பேரும் நேற்று விடுதலை செய்யப்பட்ட

02

## இறையாண்மைக்கு தீங்கு தரும் எந்த முதலீட்டுக்கும் இடமில்லை

### ஜனாதிபதி கோட்டாபய திட்டவட்டம்



கொழும்பு,ஜன.14

கொழும்புத்துறைமுகத்தின் கிழக்கு முனையம் விற்கவோ அல்லது குத்தகைக்கோ விடப்படமாட்டாது என்று துறைமுகத் தொழில்சங்கப் பிரதிநிதிகளிடம், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு விற்க முந்தைய அரசு ஒப்புக்கொண்டது. இந்த ஒப்பந்தத்தில் ஜப்பானிலிருந்து விற்பனைக்கு பிந்திய கடன் மற்றும் கடனுடன் கட்டுமான உபகர

02

## கொரோனா தொற்றால் மேலும் மூவர் மரணம்!

கொழும்பு, ஜன.14

நாட்டில் மேலும் மூவர் கொரோனா வைரஸ் தொற்றால் மரணித்தனர் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார்.

இதன்படி, பத்தர முல்ல பகுதியைச் சேர்ந்த

02

## இறையாண்மைக்கு...

ணங்கள் வாங்குவது ஆகியவை
அடங்கும்.

இந்த ஒப்பந்தம் தொடர்பில் தற்
போதைய அரசு இந்தியாவுடன் பேச்
சுக்களை நடத்திய பின்னர், இலங்கைத்
துறைமுக அதிகார சபையின் கீழ் முனை
யத்தின் 51 சதவீத உரிமையையும் கட்டுப்
பாட்டையும் தக்க வைத்துக்கொள்ள ஒரு
ஒப்பந்தம் எட்டப்பட்டது என ஜனாதி
பதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

இறையாண்மை அல்லது சுதந்திரத்
துக்கு தீங்கு விளைவிக்கும் வகையில்
நாட்டில் எந்தவொரு முதலீட்டையும்
அனுமதிக்கமாட்டேன் என்றும் ஜனாதி
பதி உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

தொழில்சங்கங்கள் கோரியபடி
கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு
முனையம் தொடர்பில் நேற்று ஜனாதி
பதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரை
யாடலில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை
வருமாறு:

பிராந்திய புவிசார் அரசியல் காரணி
கள், நாட்டின் இறையாண்மை, வருமா
னம் மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கம்
உள்ளிட்ட அனைத்துக் காரணிகளையும்
ஆய்வு செய்த பின்னர் கிழக்கு முனைய
வளர்ச்சி திட்டமிடப்பட்டுள்ளது.

முதலீட்டுத் திட்டத்தின் கீழ் கிழக்கு
முனையம், நிலையான முறையில் அபி
விருத்தி செய்யப்படும். கிழக்கு முனைய
மறு ஏற்றுமதி நடவடிக்கைகளில் இந்தியா
66 சதவீதம் பங்களிப்புச் செய்கிறது. 9 சத
வீதம் பங்களாதேஷுக்கு மறு ஏற்றுமதி
மற்றும் மீதமுள்ளவை பல நாடுகளுக்கு
ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

51 சதவீத உரிமையுடன் இலங்கை
அரசாங்கத்துக்கும், மீதமுள்ள 41 சதவீதம்
இந்தியா மற்றும் பிற பங்குதாரர்களுக்
கும் இடையிலான ஒரு கூட்டு முயற்சி
யாக முனையத்தை அபிவிருத்தி செய்
வதற்கான திட்டம் உள்ளது. இதுதொடர்
பில் எந்தச் சந்தேகமும் வேண்டாம்.
இதேவேளை தொழில்சங்கத் தலைவர்
களிடம் இந்தத் திட்டம் தொடர்பான
அனைத்து முன்மொழிவுகளையும்
யோசனைகளையும் சமர்ப்பிக்குமாறு
ஜனாதிபதி கேட்டுக்கொண்டார். (அ-எ)

## தீர்வு இல்லையேல்...

இது தொடர்பில் அவர் மேலும்
தெரிவித்ததாவது: -

“புதிய அரசமைப்பு உருவாகி தேசிய
பிரச்சினைக்குத் தீர்வு காணப் பட்டால்
அது நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை
யளிக்கும்.

புதிய அரசமைப்பு நிறைவேறா விட்
டால் நாட்டில் அமைதி, சமாதானம்,
சுபீட்சம் எதுவும் ஏற்படாது. ஆனபடி
யால் ஆட்சியாளர்கள் புத்தி சாலித்தன
மாக நடக்க வேண்டும். இல்லையேல்
இந்த நாடு சர்வதேச அரங்கில் பேராபத்
தைச் சந்திக்கும்.

எமது மக்களைப் பொறுத்தவரை -
எம்மைப் பொறுத்தவரை ஒரு நியாய
மான - சமத்துவமான - அனைவரின
தும் உரிமைகளையும் மதிக்கின்ற -
நாட்டுக்கு எவ்வித தீங்கும் ஏற்படாத -
சகலரும் ஒற்றுமையாக வாழக்கூடிய -
நீடித்து நிலைத்திருக் கக்கூடிய - நிரந்தர
தீர்வைப் பெற் றுத்தரக்கூடிய புதிய
அரசமைப்பு உருவாகுவதற்கு நாம்
பரிபூரண உதவி வழங்குவோம்.

நிரந்தர அரசியல் தீர்வின் ஊடா கவே
நாட்டு மக்களின் எதிர்காலம் வளமடை
யும் என்பதை ஆட்சியாளர்களிடம்
தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அந்தத் தீர்வானது இலங்கை வர
லாற்றில் ஒரு திருப்பு முனையாக
அமையும். இதய சுத்தியுடனான இன
நல்லிணக்கத்தை ஏற்படுத்தும்.

இலங்கைத் திருநாட்டில் வாழும் தமிழ்
மக்களுக்கு மட்டுமன்றி புலம் பெயர்ந்து
வாழும் எம்மக்களுக்கும் தைப்பொங்கல்
நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்
கொள்வதில் பெருமகிழ் வெய்துகின்
றேன். தமிழ் மக்களின் அபிலாஷை
களுக்குத் தீர்வு கிடைக்க இன்றைய
நாளில் பிரார்த்தனை செய்வோம்” - என்
றார்.

## இலக்கண...

தமிழ்ச்சங்கப் பெருந்தலைவரும் யாழ்ப்
பாணப் பல்கலைக்கழக வாழ்நாள் பேரா
சிரியருமாகிய பேராசிரியர் அ.சண்முக
தாஸுக்கு வழங்கப்படவிருக்கின்றது.

இவ்விருது வழங்கும் விழா விரைவில்
நடைபெறவுள்ளதாகவும் தமிழக முதலமைச்
சர் விருதைக் கையளிக்கவுள்ளதாகவும் உல
கத் தமிழ்ச்சங்கத்தின் இயக்குநர் முனை
வர் தா.லலிதா அறிவித்துள்ளார். (அ)

## யாழ்ப்பாணத்தின்...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை அரசாங்கம் யாழ்ப்பாணத்
தின் இந்திய கலாசார நிலையத்தை பரா
மரிக்க விருப்பம் தெரிவித்தமை வரவேற்
புக்குரியதே. இருந்தபோதிலும் பராமரிப்
பதைவிட, அருகில் இருக்கின்ற யாழ்ப்
பாண பொதுசன நூலகத்தை 1981ஆம்
ஆண்டு விஷமிகள் எரித்ததைபோல,
யாழ்ப்பாணத்தின் அழகிய இந்திய கலா
சார நிலையத்தையும் எந்தவொரு தீய
சக்திகளும் சேதப்படுத்தி விடாது உரிய
பாதுகாப்பை உறுதி செய்வதே இலங்கை
அரசின் தலையாய கடமையாகின்றது.

## முடக்கப்பட்ட...

மேலும் மூவாயிரத்துக்கும் அதிக
மான உக்ரைன் சுற்றுலாப்பயணிகள்
இலங்கைக்கு வருகை தருவார்கள் என
சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளர்
ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும்
தெரிவித்தவை வருமாறு:

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 28
ஆம் திகதியிலிருந்து தற்போது வரையில்
உக்ரைன் நாட்டிலிருந்து 1,184 பயணி
கள் இலங்கைக்கு வந்துள்ளனர்.

இவர்களில் ஒரு சிலருக்கு கொரோனா
வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்
ளது. அவர்கள் முறையான தனிமைப்
படுத்தல் செயல்பாடுகளில் ஈடுபடுத்தப்
பட்டுள்ளனர்.

எயர் -பபிள் முறைமையின் கீழ்
இவர்கள் இலங்கைக்கு வரவழைக்கப்
படுவதனால் அவர்கள் அனைவருமே
ஒரே குழுவாக நாட்டில் சுற்றுலாப் பிர
தேசங்களுக்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

அதேபோன்று மேலும் மூவாயிரத்
துக்கும் அதிகமான உக்ரைன் நாட்டு சுற்று
லாப்பயணிகள் இலங்கைக்கு வரத் தயா
ராகவுள்ள நிலையில் கட்டம் கட்டமாக
அவர்களை இலங்கைக்கு வரவழைக்க
நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்
ளன.- என்றார். (அ-எ)

## சிங்க வேடமிட்ட...

படுத்தி அதன் மூலம் அரசியல் இலாபம்
தேட முனைகின்றனர். இவ்வாறான
செயல்பாடு ஒருபோதும் வெற்றி பெறாது
என பாடசாலை உட்கட்டமைப்பு வசதி
கள் மற்றும் கல்விச் சேவை இராஜாங்க
அமைச்சர் பியல் நிஷாந்த தெரிவித்தார்.

களுத்துறையில் நேற்றுப் புதன்
கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்து
கொண்டு உரையாற்றும்போது அவர்
இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை
வருமாறு:

கொரோனா வைரஸ் தொற்றால் உயி
ரிழப்பவர்களின் சடலங்களை அடக்கம்
செய்வதா? தகனம் செய்வதா? என்ற விட
யத்தில் அரசியல் தலையீடுகள் ஏதும் இல்
லாமல் சுகாதாரத் தரப்பினரால் சிறந்த தீர்
மானம் தற்போது எடுக்கப்பட்டுள்ளது.

சுகாதாரப் பிரிவினரின் தீர்மானத்தை
நாட்டு மக்கள் அனைவரும் ஏற்றுக்
கொள்ள வேண்டும். இவ்விடயத்தில்
முரண்பட்டுக் கொள்வது பயனற்றது.

அஸாத் சாலி போன்றோர் அரசியல்
சுயதேவைக்காக சிங்கள - முஸ்லிம் மக்கள்
மத்தியில் தேவையற்ற பிரச்னையை ஏற்
படுத்த முனைகின்றனர்.

பல வழிமுறைகளில் பலம் கொண்டு
செயல்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்
பைத் தோற்கடித்து பிரிவினைவாதத்தை
அரசாங்கம் முடிவுக்குக் கொண்டு வந்தது.

நாட்டில் மீண்டும் பிரிவினைவா
தத்தை ஏற்படுத்த முயற்சிக்கும் தனிநபர்
களுக்கும், அடிப்படைவாத அமைப்புக்
களுக்கும் விடுதலைப் புலிகளின் நிலை
மையை ஏற்படுத்த அரசாங்கம் ஒரு
போதும் பின்வாங்காது. - என்றார். (அ-எ)

## கொலை...

துடன் வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்
டது.

இந்த வழக்கு மட்டக்களப்பு மேல்
நீதிமன்ற விசேட நீதிபதி டி.எஸ்.சூசை
தாசன் முன்னிலையில் நேற்று விசா
ரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது
வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
ஜோசப் பரராஜசிங்கம் 2005ஆம் ஆண்டு
டிசெம்பர் மாதம் 25ஆம் திகதி மட்டக்
களப்பு புனித மரியாள் தேவாலயத்தில்
படுகொலை செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தமிழ்
மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின்
தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தன்
உள்ளிட்ட ஐந்து பேர் சந்தேகத்தின்
பேரில் கடந்த 2015ஆம் ஆண்டு கைது
செய்யப்பட்டு தொடர்ந்து விளக்கமறிய
லில் வைக்கப்பட்டிருந்தனர்.

இதனையடுத்து 2015ஆம் ஆண்டு
தாங்கள் கைதுசெய்யப்பட்டு குற்ற
ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்ட
முதலாம் 02ஆம் எதிரிகளின் வாக்குமூல
மானது சுயாதீனமாக வழங்கப்பட
வில்லை, தூண்டுதல் அல்லது அச்சுறுத்
தல் காரணமாக அந்த வாக்குமூலம்
வழங்கப்பட்டுள்ளது, பயங்கரவாதத்
தடுப்புப் பிரிவினரால் நேரடியாக நீதி
மன்றில் ஆஜர்படுத்தப்பட்டு வாக்கு
மூலம் வழங்கியிருந்தனர் எனத் தெரி
வித்து மேன்முறையீட்டு நீதிமன்றில்
மீளாய்வுக்கு விண்ணப்பித்தனர்.

இதன் பிரகாரம் ஒப்புதல் வாக்கு
மூலத்தை மேன்முறையீட்டு நீதிமன்றம்
நிராகரித்தன் அடிப்படையில் 24ஆம்
திகதி மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்
தில் சட்டமா அதிபரின் ஒப்புதலின்
பேரில் பிணை வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் கடந்த திங்கள்கிழமை
சட்டமா அதிபர் திணைக்களம் இந்த
வழக்கைத் தொடர்ந்து நடத்தமுடியாது
என மட்டக்களப்பு மேல் நீதிமன்றுக்கு
அறிவித்திருந்த நிலையில் குற்றச்சாட்டுக்
களிலிருந்து அவர்களை விடுவித்து வழக்
கும் தள்ளுபடி செய்யப்பட்டது. (அ-எ)

## கைதான...

மாகக் கொண்ட “எல்லைகள் அற்ற ஊடக
வியலாளர் அமைப்பு“ (Reporters Without
Borders - RSF) இலங்கை அரசிடம் கேட்
டிருக்கிறது.

மட்டக்களப்பைச் சேர்ந்த சுயாதீன
பத்திரிகையாளர் முருகுப்பிள்ளை கோகுல
தாசன் என்பவரையே விடுதலை செய்யு
மாறு கோரி ஆர்.எஸ்.எவ். அமைப்பு
அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்
பதாவது:

ஜனவரி 16 ஆம் திகதி ஐம்பதாவது
நாளை சிறையில் நிறைவு செய்யும் முரு
குப்பிள்ளை கோகுலதாசன் கடந்த ஆண்டு
நவம்பர் 26 ஆம் திகதி பயங்கரவாதத்
தடைச் சட்டத்தின் கீழ் ஒரு முகநூல்
பதிவுக்காகக் கைது செய்யப்பட்டார்.
இச் சட்டம் பெரும்பாலும் பத்திரிகை
யாளர்களை மௌனிக்கச் செய்வதற்குப்
பயன்படுத்தப்படுகின்ற கடுமையான
சட்டம்.

2009 இல் தோற்கடிக்கப்பட்ட விடு
தலைப்புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்
களது படங்களை முகநூலில் வெளியிட்ட
தாகவே அவர் கைது செய்யப்பட்டார்.
ஆனால் வேறு வட்டாரங்கள் ஊடாக
எமக்குத் தனித்தனியே கிடைத்த ஆதா
ரங்களின்படி அவர் ஆண்டு தோறும்
நவம்பர் மாதங்களில் உள்நாட்டுப் போரில்
கொல்லப்பட்ட சிறுபான்மைத் தமிழர்
களை நினைவுகூருகின்ற நிகழ்வு தொடர்
பான ஒரு பதிவையே வெளியிட்டிருந்
தார் என்பது தெரிய வந்துள்ளது.

“முருகுப்பிள்ளை கோகுலதாசனின்
கைதும் பயங்கரவாதத் தடைச்சட்டத்
தின் கீழ் அவரைத் தொடர்ந்து தடுத்து
வைத்திருப்பதும் ஊடக சுதந்திரத்தின்
மீதான மீறல் என்பதை வெளிப்படையா
கக் காட்டுகின்றன” என்று ஆர்.எஸ்.எவ்.
அமைப்பின் ஆசிய பசுபிக் பிரிவின் பொறுப்
பாளர் டானியல் பஸ்ராட் தெரிவித்திருக்
கிறார். கோகுலதாசனை உடனடியாக,
நிபந்தனை ஏதும் இன்றி விடுவிக்க உத்
தரவிடுமாறு இலங்கையின் சட்டமா
அதிபரைக் கேட்டுக் கொள்கின்றோம்.

தமிழர் பிரச்னையை நேரடியாகவோ
மறைமுகமாகவோ வெளிப்படுத்துகின்ற
ஊடகவியலாளர்களைப் பாதுகாப்புப்
படைகள் துன்புறுத்துவது நிறுத்தப்பட
வேண்டும்.

வெளிநாட்டுகளில் தமிழ் புலிகளிடம்
இருந்து பணம் பெற்றனர் என்று தெரி
வித்து ஒராண்டுக்கு முன் மட்டக்களப்
பில் ஏழு ஊடகவியலாளர்களது தகவல்
கள் வட்டமிடப்பட்ட அவர்களது தலை
களின் படங்களுடன் துண்டுப் பிரசுர
மாக வெளியிடப்பட்டன. அது தொடர்
பாக சம்பந்தப்பட்டவர்கள் செய்த முறைப்
பாட்டைப் பதிவு செய்வதற்கோ அவர்
களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கோ
பொலீஸார் மறுத்து விட்டனர்.

-இவ்வாறு ஆர்.எஸ்.எவ். தனது
அறிக்கையில் தெரிவித்துள்ளது. (அ)

## நேற்று...

டோர் எண்ணிக்கை 50 ஆயிரத்து 229ஆக
அதிகரித்துள்ளது.

இதேவேளை, இதுவரை 43 ஆயிரத்து
267 பேர் தொற்றிலிருந்து மீண்டுள்ளது
டன் இன்னும் 6 ஆயிரத்து 718 பேர்
தொடர்ந்தும் வைத்தியசாலைகளில்
சிகிச்சைபெற்று வருகின்றனர்.

அத்துடன் இலங்கையில் கொரோனா
தொற்றால் இதுவரை 244 பேர் உயிரிழந்
தனர். (அ-எ)

## தனக்கு இரு...

துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது
என்று ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற
உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்
தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்
தில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற
ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்
வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை
வருமாறு:

தனக்கு இரு பக்கங்கள் உள்ளன எனக்
கூறிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ,
அவ்வாறே செயல்பட்டுக் கொண்டிருக்
கிறார். இதன் காரணமாகவே மக்கள்
மத்தியில் கொழும்பு துறைமுக கிழக்கு
முனையத்தை இந்தியாவுக்கு வழங்க
வில்லை என்று கூறிவிட்டு அதற்கான
அமைச்சரவைப் பத்திரத்துக்கு அனுமதி
வழங்கியுள்ளனர். இதேபோன்று அதி
வேக நெடுஞ்சாலை அபிவிருத்திப் பணி
களையும் தனியார் கம்பனிகளுக்கு ஒப்
படைத்துள்ளனர்.

எவ்வாறிருப்பினும் கடன்களைச் மீளச்
செலுத்துவதில் எவ்வித சிக்கலுமில்லை
என்று அரசாங்கம் கூறுகிறது. ஆனால்
அமைச்சரவை இணைப் பேச்சாளர், வழங்
கிய கடனை மீளச் செலுத்த மீண்டும் கடன்
வழங்குமாறு கோரிக்கை விடுக்கிறார்.

இலங்கைக்கு கடனை மீளச் செலுத்த
முடியாது என்று அறிந்தும் யார் முதலீடு
களை மேற்கொள்ள முன்வருவார்கள்?
வெளிநாட்டுக் கடன் பெறப்போவ
தில்லை என்று கூறுபவர்கள் குறைந்தது
200 மில்லியன் டொலர்கள் கடன் பெறு
வதற்காக விளம்பரம் செய்துள்ளனர்.
இவ்வாறிருக்கையில் கடன் பெறப்போவ
தில்லை என்று கூறி யாரை ஏமாற்ற முயற்
சிக்கிறார்கள்?

கடந்த ஒரு வருடத்தில் அரிசியின்
மொத்த விலை 37 ரூபாவால் அதிகரித்
துள்ளது. அதற்கமைய அரிசியின் விலை
தற்போது 137 ரூபாவாக உள்ளது. எனி
னும் ஜனாதிபதியால் வெளியிடப்பட்
டுள்ள அறிக்கையில் 98 ரூபா என்றே
குறிப்பிடப்பட்டுள்ளது. உரம் தொடர்
பான விலையிலும் இவ்வாறே இடம்
பெறுகிறது. ஜனாதிபதியின் சுபீட்சத்தின்
நோக்கு இவ்வாறுதான் செயல்படுத்தப்
படுகிறதா? - என்றார். (அ-எ)

## கொரோனா...

66 வயது நபரும், கொழும்பு-15 பகுதி
யைச் சேர்ந்த 81 வயது நபரும்,
கொழும்பு-10 பகுதியைச் சேர்ந்த 89
வயது நபருமே உயிரிழந்தனர். இந்
நிலையில், இலங்கையில் கொரோனா
தொற்றால் மரணித்தோர் எண்ணிக்கை
247 ஆக அதிகரித்துள்ளது. (அ-எ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
14.01.2021 வியாழக்கிழமை
சார்வரி, தை 01

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

e-mail: editor@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# துணைவேந்தர் அரசியல்

இரவில் இடித்தழிக்கப்பட்ட யாழ். பல்கலைக்கழக்கத்தின் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி விவகாரம் முடிவுக்கு வந்துவிட்டது. அதாவது, (பகலில்) குறித்த தூபிக்கு மீளவும் அடிக்கல் வைக்கப்பட்டதன் மூலம், பிரச்னையை துணைவேந்தர் முடித்து வைத்திருக்கின்றார். இது மீண்டும் பூதாகாரமானதொரு பிரச்னையாக விரைவில் தலையெடுக்கலாம். ஏனெனில், இதற்கான அனுமதியை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் பெறவேண்டும். அதற்கு ஆணைக்குழு இடமளிக்க வேண்டும். ஒரு வேளை ஆணைக்குழு அனுமதியளித்தால்கூட, தென்னிலங்கையில் இது அரசியலாக்கப்படும்போது பிரச்னை பெரிதாகும். சிங்கள - பௌத்த கடும்போக்குவாதிகள் சிலர் நீதிமன்றத்தையும் நாடலாம். நாட்டின் அமைதிக்கு குந்தகமென்று வாதிடலாம். ஒன்றை இடித்துவிட்டு, புதிதாக கட்டுவதென்பது இந்த நாட்டை பொறுத்தவரையில் இலகுவான விடயமல்ல.

இது எதற்காக இடிக்கப்பட்டது? ஏன் மீளவும் கட்டுவதற்கு துணைவேந்தர் இணங்கினார். அனைத்தும் மர்மமாகவே இருக்கின்றது. இது எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறவுள்ள ஜெனிவா கூட்டத்தொடரில் கடுமையாக எதிரொலிக்கலாம். ஆனால், அரசாங்கமோ இதற்கும் தங்களுக்கும் எவ்வித தொடர்புமில்லையென்று கைவிரிக்கும். அமைச்சரவை உதவிப் பேச்சாளர் உதய கம்மன்பில, இது முற்றிலும் பல்கலைக்கழகத்தின் முடிவு. அரசாங்கத்திடம் இவ்வாறான கொள்கை நிலைப்பாடுகள் எவையுமில்லை. தவிர, ஒரு பல்கலைக்கழத்திற்குள் எதனை வைத்திருக்க வேண்டும் எதனை அகற்ற வேண்டுமென்பதை பல்கலைக்கழகமே தீர்மானிக்கும் - என்று தெரிவித்திருக்கின்றார். அரசாங்கத்தின் பொறுப்புவாய்ந்த எவருமே இந்த விடயம் தொடர்பில் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. இதன்மூலம் விடயம் முற்றிலும் யாழ்ப்பாண பல்கலைக்கழக விவகாரமாகவே மட்டுப்படுத்தப்பட்டுவிட்டது. ஒருவேளை இது தொடர்பில் ஜெனிவாவில் கேள்வி எழுப்பினால், தமிழர்களில் படித்த சமூகத்தினர் இது போன்ற விடயங்களை விரும்பவில்லை. இதன் காரணமாகவே யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சற்குணராஜா இதனை இடித்திருந்தார் என அரசாங்கம் வாதிடக்கூடும். ஏனெனில், விடயங்களை அவதானித்தால் அவ்வாறானதொரு தோற்றம்தான் தெரிகின்றது.

உண்மையிலேயே துணைவேந்தருக்கு உயர்மட்டத்திலிருந்து அழுத்தங்கள் வந்திருந்தால், அதனை அவர் பகிரங்கப்படுத்தியிருக்க வேண்டும். அரசியல் தலைமைகள், சிவில் சமூக தலைவர்களுடன் உரையாடியிருக்க வேண்டும். இந்தப் பிரச்னையை சமூகத்தின் பிரச்னையாக மாற்றியிருக்க வேண்டும். அனைவருமே இணைந்து பிரச்னையை எதிர்கொண்டிருக்க வேண்டும். ஆனால், நடந்ததோ வேறு. இரவோடிரவாக தூபியை இரகசியமாக அகற்றுவதற்கு திட்டமிட்டிருக்கின்றார். தூபியை இடித்தழிப்பது ஒன்றுதான் சிறந்தவழியென்று சிந்தித்து, அதனை நடைமுறைப்படுத்தியுமிருக்கின்றார். அவ்வாறாயின், துணைவேந்தர் யாரை திருப்திப்படுத்த முயற்சித்திருக்கிறார்? அல்லது, ஆழமறியாது காலைவிட்டு மாட்டிக்கொண்டாரா?

விடயங்களை உற்றுநோக்கினால், துணைவேந்தரின் செயல்பாடுகள், ஒரு கல்விச் சமூகத்தின் பிரதிநிதியின் நடவடிக்கையாகத் தெரியவில்லை. முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களின் நினைவாக மாணவர்களால் நிறுவப்பட்ட ஒரு நினைவுச் சின்னத்தை இடித்துவிட்டு, பின்னர் அதே இடத்தில், தேவாரம் ஓதி அடிக்கல் நாட்டுகின்றார். இதனை பார்க்கும் ஒருவருக்கு துணைவேந்தரின் நடவடிக்கை ஒரு நகைச்சுவையாக தெரியக்கூடும். ஆனால், அவரது நடவடிக்கையால், ஒட்டுமொத்த யாழ். கல்விச் சமூகமுமே தலைகுனிந்திருக்கின்றது. பல கல்விமான்களை உருவாக்கிய யாழ். பல்கலைக்கழகத்திற்குள், ஒரு துணைவேந்தர் இரவோடிரவாக, ஒரு நினைவுச் சின்னத்தை 'புல்டோசர்' போட்டு இடித்திருக்கின்றார். இதற்குபின்னால் எத்தகைய அரசியலும் இருக்கலாம். ஆனால், ஒரு செயலின்போது கடைப்பிடிக்க வேண்டிய ஆகக்குறைந்த கண்ணியம் கூட, இங்கு கடைப்பிடிக்கப்படவில்லை.

# யாழ்ப்பாணத்தின் இந்திய கலாசார நிலையம்!



- அலசுவது இராஜதந்திரி -

இந்திய பிரதமர் நரேந்திர மோடி 2016ஆம் ஆண்டு தமது இலங்கை விஜயத்தின்போது யாழ்ப்பாணத்துக்கும் விஜயம் செய்து, யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்துக்கு அருகே நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்திய கலாசார நிலையத்துக்கான அடிக்கல்லையும் நாட்டியிருந்தார்.

இருந்தபோதிலும் பல்வேறு அம்சங்களையும் சர்வதேச தரத்தில் தன்னகத்தே கொண்டிருக்கும் யாழ்ப்பாணத்தின் இந்திய கலாசார நிலையம் இந்திய-இலங்கை நல்லுறவை யாழ்ப்பாண மண்ணோடு பின்னிப்பிணைந்த வண்ணம் நிர்மாணிக்கப்பட்டுள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

நேற்றுமுன்தினம் கொழும்பில் யாழ்ப்பாணத்தின் இந்திய கலாசார நிலையத்தை திறந்து வைப்பது பற்றியும் அதன் எதிர்கால பராமரிப்பு பற்றியும் விசேட கூட்டமொன்று இடம்பெற்றிருந்தது.

அச்சமயம் புதிய இந்திய கலாசார நிலையத்தை யாழ்ப்பாணம் மாநகர சபையினால் பராமரிக்க முடியாது என்ற தோரணயில் அரசாங்க தரப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அச்சமயம் யாழ்ப்பாண மேயர் வி. மணிவண்ணன் அதனை மறுத்து, யாழ்ப்பாண மாநகர சபையினால் புதிய இந்திய கலாசார நிலையத்தை பராமரிக்க முடியும் என்பதை எவ்வித தயக்கமுமின்றி குறிப்பிட்டிருந்தார்.

**மதுர பிரேமதிலக்க**

யாழ்ப்பாணத்தின் இந்திய கலாசார நிலையத்தின் கட்டிடத்தை வடிவமைத்தவர் இலங்கை கட்டிடக்கலைஞரான மதுர பிரேமதிலக்க என்பவராவார்.

யாழ்ப்பாணத்தின் இந்திய கலாசார நிலையத்தை வடிவமைப்பதற்காக 29 கட்டிடக்கலை நிபுணர்களின் வடிவமைப்புகள் ஒரு போட்டித்தன்மையோடு பெறப்பட்டிருந்தன.

எனவே, இந்திய கலாசார நிலையத்தின் வடிவமைப்புக்காக பெறப்பட்ட 29 கட்டிடக்கலை வடிவமைப்புகளில் சிங்கள இனத்தவரான கட்டிடக்கலைஞர் மதுர பிரேமதிலக்கவின் வடிவமைப்பே முதலிடம் பெற்று தெரிவாகியிருந்தது.

கட்டிடக்கலைஞர் மதுர பிரேமதிலக்கவின் வடிவமைப்பை இலங்கையிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம், மற்றும் பிரபலமிக்க இந்திய-இலங்கை கட்டிடக்கலை நிறுவனங்கள் விரிவாக ஆராய்ந்தே ஏற்றுக்கொண்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

**பரிசுத்தொகை**

யாழ்ப்பாணத்தின் இந்திய கலாசார நிலையத்தை வடிவமைத்தமைக்காக கட்டிடக்கலை நிபுணர் மதுர பிரேமதிலக்கவுக்கு 3,500 அமெரிக்க டொலர், முதல் பரிசாக வழங்கப்பட்டிருந்தது.

இரண்டாவதாக தெரிவான வடிவமைப்புக்கு 3,000 அமெரிக்க டொலர் பரிசும் மூன்றாவதாக தெரிவான வடிவமைப்புக்கு 2,000 அமெரிக்க டொலர் பரிசும் வழங்கப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணத்தின் இந்திய கலாசார நிலையத்தினது நிர்மாணப்பணிக்காக இலங்கை நாணய மதிப்பில் 90 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது.

600 பேர் அமரக்கூடிய உள்ளரங்கமும் கண்காட்சிக்கூடம் மற்றும் இணையத்தள செயற்பாடுகள், பல்துறை ஊடக வசதிகள் என்பவற்றையும் உள்ளடக்கியதாக குளிரூட்டப்பட்ட மற்றும் சர்வதேச தரத்திலான ஒலி,-ஒளி வடிவமைப்புகளோடு கட்டிடத்தைச் சூழவர கண்கவர் பூங்காவும், வாகனங்கள் நிறுத்தப்படுவதற்கான தரிப்பிடமும் அமைக்கப்பட்டிருக்கும்.

யாழ்ப்பாண பொதுசன நூலகம், வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாண மணிக்கூட்டு கோபுரம், டச்சுக்கோட்டை ஆகியவற்றை பின்னணியாகவும் கொண்டதாக புதிய இந்திய கலாசார நிலையம் யாழ்ப்பாணத்தில் அமைந்திருக்கும்.

**கட்டிடக்கலைஞர் எஸ். நரசிம்மன்**

இத்தருணத்தில் யாழ்ப்பாண மக்களது பெருமைக்குரிய சின்னமாக விளங்கிவருகின்ற ஆசியாவின் தலைசிறந்த நூலகங்களில் ஒன்றான யாழ்ப்பாண பொதுசன நூலகத்தை தென்னிந்திய கட்டிடக்கலை நிபுணரான எஸ். நரசிம்மன் வடிவமைத்திருந்தார் என்பதும் நினைவில் கொள்ளத்தக்கது.

யாழ்ப்பாண பொதுசன நூலகத்தை ஒரு சர்வதேச தரத்தில் பேணும் விதத்தில் இந்தியாவின் கீர்த்திமிக்க நூலகரான எஸ். ஆர். ரங்கநாதன் தமது ஆலோசனைகளை அன்று வழங்கியிருந்தார்.

யாழ்ப்பாண பொதுசன நூலகம் இந்திய கட்டிடக்கலைஞர் எஸ். நரசிம்மனால் வடிவமைக்கப்பட்டதோடு, யாழ்ப்பாண நூலகப் பராமரிப்பு குறித்து இந்தியாவின் பிரபல நூலகர் எஸ். ஆர். ரங்கநாதனின் ஆலோசனையின் பிரகாரம் கிடைத்தற்கரிய நூல்கள் மட்டுமல்ல, ஏட்டுச்சுவடிகளும் யாழ்ப்பாண நூலகத்தில் வைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், பெரும் பொருட்செலவில் உருவாக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணத்தின் இந்திய கலாசார நிலையத்தை இலங்கை அரசாங்கம் பராமரிக்க முன்வந்ததை யாழ்ப்பாண மேயர் வி. மணிவண்ணன் நிராகரித்திருப்பது யாழ்ப்பாண மக்களின் தனித்துவத்தையும் ஆளுமையையும் பிரதிபலிப்பதாக இருக்கின்றது.

(02ஆம் பக்கம் பார்க்க)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



# வடக்குக்கு ரயில்களில் வரும் பயணிகள் சுகாதாரப் பிரிவுக்கு தெரியப்படுத்தவும்

## வடக்கு சுகாதார பணிப்பாளர் அறிவிப்பு



**யாழ்ப்பாணம்,ஜன.14**

**வடக்கிற்கான ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், கொரோனா ஆபத்து பிரதேசங்களிலிருந்து வரும் பயணிகள் அந்தந்த பிரதேசங்களில் சுகாதாரப் பிரிவினருடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளவேண்டும் வடக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ரயில் மூலம் வடக்குக்கு வருகின்ற பயணிகள் தங்கள் இடங்களுக்கு வந்த பின்னர் உடனடியாக அந்தந்த பிரதேசத்தில் உள்ள சுகாதார பிரிவினருக்கு அறிவிக்கவேண்டும் அல்லது பொதுமக்கள் இவ்வாறு வருகின்றவர்களின் தகவல்களை சுகாதாரப் பிரிவுக்கு அறிவிக்கவேண்டும்.

முக்கியமாக கொரோனா ஆபத்து வலயங்களிலிருந்து வருகின்றவர்களை சமூக அக்கறையோடு செயற்படவேண்டும் - என்றார்.

# 66 ஆயிரம் இலங்கையர் நாட்டிற்கு வர எதிர்பார்ப்பு

கொழும்பு, ஜன. 14

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களை நேற்று முதல் நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதற்கமைய அரசாங்க தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு உட்படும் 300 பேர் நாளாந்தம் நாட்டுக்கு அழைத்து வரப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் வரை 66 ஆயிரம் பேர் நாட்டுக்கு வருவதற்காக பதிவு செய்துள்ளனர் எனக் கூறப்பட்டுள்ளது.




# 1000 ரூபா விடயத்திலும் ராஜபக்ஷ அரசு ‘பெயில்’

## வேலுகுமார் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 14

நாட்டு மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றுவதில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் ‘பெயில்’ என்பது ஆயிரம் ரூபா சம்பள உயர்வு விடயத்திலும் உறுதியாகியுள்ளது என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் கண்டி மாவட்ட செயற்பாட்டாளர்கள் சிலருடன் நேற்று நடைபெற்ற சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் வேலுகுமார் எம்.பி. மேலும் கூறியவை வருமாறு,

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாட் சம்பளமாக ஆயிரம் ரூபா நிச்சயம் பெற்றுக் கொடுக்கப்படும் என்ற உறுதிமொழியை ஜனாதிபதி கோட்டாபய, பிரதமர் மஹிந்த உட்பட ஆளுங் கட்சி உறுப்பினர்கள் வழங்கியிருந்தனர். இது தொடர்பில் விசேட அறிக்கையும் விடுக்கப்பட்டிருந்தது.

அதுமட்டுமல்ல 2021 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்திலும் அதற்கான முன்மொழிவு இடம்பெற்றிருந்தது. சம்பள உயர்வை வழங்க மறுக்கும் நிறுவனங்களின் முகாமைத்துவம் மீள் பரிசீலனை செய்யப்படும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு பிரமாண்டமான அறிவிப்புகளையும், உறுதிமொழிகளையும் வழங்கிய அரசாங்கம் இன்று கம்பனிகளுக்கு காவடி தூக்கும் வகையில் செயற்படுகின்றது. இதன் மூலம் அரசின் முகத்திரை கிழிந்துள்ளது.

அரசாங்கம் வழங்கும் உறுதிமொழி என்பது காற்றில் பறக்க கூடியது எனசுட்டிக்காட்டிருந்தோம். சம்பள விடயத்திலும் அது உறுதியாகியுள்ளது-என்றார்.

# மேல் மாகாணத்தை மீண்டும் முடக்கவேண்டிய ஏற்படலாம்

கொழும்பு, ஜன. 14

மேல் மாகாணத்தை மீண்டும் முடக்கவேண்டிய நிலை ஏற்படலாம் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப்பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கொழும்பு, வடக்கு மற்றும் மத்திய கொழும்பு பகுதிகளில் நீண்ட காலமாக தனிமைப்படுத்தப்பட்டிருந்த பகுதிகள் தற்போது விடுவிக்கப்பட்டுள்ளன.

எனினும் அந்த பகுதிகளிலுள்ள மக்களுக்கு தொடர்ந்தும் தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை பின்பற்றுமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இந்த விதிமுறைகளை அப்பகுதி மக்கள் உரியமுறையில் பின்பற்றுகின்றார்களா என்று உறுதிப்படுத்திக்கொள்வதற்காக சிவில் உடையில் பொலிஸார் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ள பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை கடைப்பிடிப்பதில்லை என்று தெரிய வந்துள்ளது.

சுகாதார சட்டவிதிகளுக்கு புறம்பாக ஒன்றுகூடி கலந்துரையாடல்களில் ஈடுபடல், உணவு உட்கொள்ளுதல் போன்ற செயற்பாடுகளை அப்பகுதி மக்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

தொடர்ந்தும்இவ்வாறு செயற்பட்டால், அந்த பகுதிகளில் மீண்டும் கொவிட்-19 வைரஸ் கொத்தணிகள் உருவாகுவதற்கு வாய்ப்புள்ளது.

அதனால் அப்பகுதிகளை மீண்டும் தனிமைப்படுத்தி வைக்கவேண்டிய நிலைமை ஏற்படும்-என்றார்.

# மக்கள் அதிகம்கூடும் இடங்களில் கொரோனா தடுப்பு பரிசோதனை

கொழும்பு,ஜன.14

நாட்டில் மக்கள் அதிகமாக ஒன்றுகூடும் இடங்களில் கொரோனா வைரஸ் தொற்றுக்கான துரித பரிசோதனைகளை மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி பல்பொருள் அங்காடிகள், மீன் சந்தைகள் உள்ளிட்ட அதிகளவானோர் செல்லக்கூடிய இடங்களில் கொரோனா பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். இதற்கு மேலதிகமாக கொழும்பு மாவட்டத்திலிருந்து வெளியேறும் தரப்பினருக்கு 11 இடங்களில் கொரோனா தடுப்பு பரிசோதனைகளை மேற்கொள்ளும் திட்டம் மீள ஆரம்பிக்கப்படவுள்ளது.

அடுத்த மாதத்தில் ஏதேனும் ஒருவகை கொரோனா தடுப்பூசி நாட்டுக்கு கொண்டுவரப்படும். இந்நிலையில் கொரோனா தடுப்பூசியை ஏற்றுவதற்கான நடவடிக்கைகள் இராணுவத்தினரின் தலைமையில் மேற்கொள்ளப்படவுள்ளன எனத் தெரிவித்தார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)

# வெளிநாட்டு துப்பாக்கியுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஜன. 14

ரத்கம பகுதியில் வெளிநாட்டுத் துப்பாக்கி மற்றும் தோட்டாக்களுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். ரத்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கபுமுல்ல பகுதியில் விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டார் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. இதன்போது காணியொன்றில் புதைத்து வைக்கப் பட்டிருந்த வெளிநாட்டு துப்பாக்கி, 7 தோட்டக்கள் என்பன கைப்பற்றப்பட்டன. ரத்கம பகுதியைச் சேர்ந்த 44 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப் பட்டுள்ளார்.




சுகாதாரப் பிரிவினர் நேற்று அதிரடி

# சுகாதார விதிகளை மீறிய யாழ். திரையரங்குக்கு சீல்!

யாழ்ப்பாணம், ஜன. 14

சுகாதார நடைமுறைகளை மீறியதாக யாழ்ப்பாணம் நகரில் திரையரங்கு ஒன்று சுகாதாரத் துறையினரால் மூடப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்திய சாலை வீதியில் உள்ள திரையரங்கே நேற்று நண்பகல் முதல் சுகாதாரத் துறையினரால் மூடப்பட்டது.

நாட்டின் திரையரங்குகளை இருக்கைகளின் எண்ணிக்கையில் 50 சதவீத பார்வையாளர்களை மட்டுமே அனுமதித்து இயங்க அரசு ஒப்புதல் வழங்கியிருந்தது.

எனினும் யாழ்ப்பாணம் நகரில் மூடப்பட்ட திரையரங்கு முழுமையான இருக்கைகளுக்கு பார்வையாளர்களை அனுமதித்து ரிக்கெட்டுக்களை விற்பனை செய்திருந்தது என்று சுகாதாரத் துறையினரால் கண்டறிப்பட்டது.

அதனாலேயே அந்த திரையரங்கு சுகாதார நடைமுறைகளின் மூடப்பட்டதாக சுகாதாரத் துறையினர் தெரிவித்தனர்.

# மன்னார் மாவட்டத்தில் மேலும் ஐவருக்கு தொற்று



மன்னார், ஜன. 14

மன்னார் மாவட்டத்தில் மேலும் 5 நபர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதோடு, இது வரை மன்னார் மாவட்டத்தில் 31 நபர்கள் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி. வினோதன் தெரிவித்தார்.

மன்னாரில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்றுக் காலை இடம் பெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் தற்போதுவரை மன்னார் மாவட்டத்தில் 31 நபர்கள் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஜனவரி மாதத்தில் அடையாளம் காணப்பட்ட 14 பேரில் 11 பேர் எருக்கலம்பிட்டி பகுதியையும், ஒருவர் புதுக்குடியிருப்பு பகுதியையும், ஒருவர் காத்தான்குடி பகுதியையும், மேலும் ஒருவர் நிக்கரவெட்டிய பகுதியையும் சேர்ந்தவர்கள் ஆவர். மேலும் மன்னார் நகர் உப்புக்குளம் பகுதியில்,கடந்த திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்ட 114 பீ.சி.ஆர்.பரிசோதனைகளின் முடிவுகளையும் எதிர்பார்த்துள்ளோம்.

மக்கள் அச்சமடைய தேவை இல்லை என்றபோதும் மிகவும் அவதானமாகவும் சுகாதார நடைமுறைகளை பின்பற்ற வேண்டும்.

சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்கள் தமது தனிமைப் படுத்தும் காலம் முடிவடையும் வரை வெளியில் வரவேண்டாம். கொரோனா நோய்க்கான தடுப்பு மருந்து எதிர்வரும் மாதம் முதல் நாடளாவிய ரீதியில் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு முதல் கட்டமாக வழங்கப்பட உள்ளது - என்றார்.

# இந்திய மீனவர்கள் 26 பேர் எச்சரிக்கப்பட்டு விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 14

இனிவரும் காலங்களில் எல்லைதாண்டி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் மீனவர்கள் கைது செய்யப்பட்டால் அவர்களுக்கு இரண்டு ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை வழங்கப்படும் என்று எச்சரித்து தடுத்துவைக்கப்பட்டிருந்த 26 மீனவர்களையும் விடுதலை செய்து ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிபதி யூட்சன் உத்தரவிட்டார்.

காரைநகர் கடற்படைத் தளத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் 26 பேரும் கடற்படையினரால் படகுகளில் ஊர்காவற்றுறை நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர்.

எல்லைதாண்டிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தமை, தடை செய்யப்பட்ட இழுவை மடி வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் அந்த மீனவர்களுக்கு எதிராக முன் வைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், வழக்கின் காத்திரத்தன்மையை இந்திய மீனவர்கள் தரப்பு புரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக, நீதிபதி நேரடியாகவே மீனவர்களிடம் விசாரணை மேற்கொண்டார்.

விசாரணையின் முடிவில், மீனவர்கள் பயணித்த நான்கு படகுகள், மீன்களின் ஒலியை கண்டறியப் பயன்படுத்தப்படுகின்ற எக்கோ இயந்திரம், தொலைபேசிகள், மீன்பிடி வலைகள் உட்பட்ட அனைத்துப் பொருட்களும் அரசுடைமை ஆக்கப்படும் என்று நீதிபதி அறிவித்தார்.

அதன் பின்னர் மீண்டும் அந்த மீனவர்கள் மீண்டும் இலங்கைக் கடற்பரப்புக்குள் கைது செய்யப்பட்டால் உடனடியாகவே இரண்டு ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று எச்சரித்து விடுதலை செய்தார்.

அத்துடன் இந்த மீனவர்களே எல்லைதாண்டி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் இறுதி இந்திய மீனவர்களாக இருக்க வேண்டும் என்றும் இந்த எச்சரிக்கையை மீறி உள்நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் கைது செய்யப்பட்டால் அவர்கள் அனைவருக்கும் இரண்டு ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை வழங்கப்படும் என்றும் அவர்களின் பொருட்கள் அனைத்தும் அரசுடைமையாக்கப்படும் என்றும் நீதிபதி எச்சரித்தார்.

இந்த வழக்கின்போது நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளும் பிரசன்னமாகியிருந்தனர்.

கைதான மீனவர்களுக்கு இரு தடவைகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே நீதிமன்றில் முற்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் வைத்தியசாலை தாதிக்குத் தொற்று

மன்னார், ஜன. 14

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் மருத்துவ விடுதி மறு அறிவித்தல்வரை மூடப்பட்டுள்ளதுடன் அதில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் மற்றும் நோயாளிகள் சுய தனிமைப்படுத் தப்பட்டுள்ளனர்.

அத்துடன், அந்த விடுதியில் பணியாற்றியவர்களிடம் நேற்று முன்னெடுக்கப்பட்ட அன்ரிஜென் பரிசோதனையில் தாதிய உத்தியோகத்தருக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் மருத்துவ விடுதியில் சிகிச்சை பெற்று வந்த நோயாளி ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்ட நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மன்னார் வைத்தியசாலை மருத்துவ சேவையாளர்களுக்கு தொற்று ஏற்படலாம் என்று அச்சநிலை அங்கு காணப்படுகிறது.

அதனால் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு நோயாளிகளைப் பார்வையிடல் உள்ளிட்ட தேவையற்ற காரணங்களுக்கு வருகை தருவதைத் தவிர்க்குமாறு பொதுமக்களிடம் கோரப்பட்டுள்ளது.

(அ)

# தலைமைப் பதவியை தக்கவைத்தார் ரணில்

## பொதுச் செயலாளராக பாலித



கொழும்பு, ஜன. 14

ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய பொதுச் செயலாளராக பாலித ரங்கே பண்டார நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் விசேட மத்திய செயற்குழுக் கூட்டம் நேற்று முற்பகல் கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது.

இதன்போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், கட்சியின் தவிசாளராக வஜிர அபேவர்தனவும், உப தலைவராக அகிலவிராஜ் காரியவசமும், பிரதித் தலைவராக ருவான் விஜேவர்தனவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தலைமைப்பதவியில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை.

# புதிய அரசமைப்பு சட்டமூலம் இவ்வருடத்துக்குள் சபைக்கு!

கொழும்பு, ஜன. 14

புதிய அரசமைப்பு தொடர்பான சட்டமூலத்தை இவ்வருடத்துக்குள் பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.

புதிய அரசமைப்புக்கான யோசனைகள் அடங்கிய வரைவு நகலை முன்வைப்பதற்காக அரசாங்கத்தால் 11 பேரடங்கிய நிபுணர்கள் குழுவொன்று அமைக்கப்பட்டது.

மேற்படி குழு பொது மக்கள் உட்பட அனைத்து தரப்பினரிடமும் மின்னஞ்சல் மற்றும் பதிவுத் தபால் மூலம் கருத்துகளை கோரியது. இதன்படி பல தரப்பினரும் யோசனைகளை முன்வைத்திருந்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்கு கூட்டணி உட்பட பல கட்சிகளும் காத்திரமான முன்மொழிவுகளை அனுப்பி வைத்துள்ளன.

புதிய அரசமைப்புக்கான இக்குழுவின் யோசனை எதிர்வரும் மார்ச்சில் அரசாங்கத்திடம் கையளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் பின்னர் புதிய அரசமைப்பை இயற்றுவதற்கான சட்டமூலம் தயாரிக்கப்பட்டு, அமைச்சரவை அனுமதி உட்பட சட்ட பூர்வமான ஏற்பாடுகள் எல்லாம் பூர்த்தியான பின்னர் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

இதன்படி 2021 இற்குள் புதிய அரசமைப்பு இயற்றப்படும் எனவும் அறியமுடிகின்றது.

சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்லாத வகையில் புதிய அரசமைப்பை இயற்றுவதே அரசாங்கத்தின் திட்டமாக இருக்கின்றது. தேசியக்கொடி, தேசிய கீதம் உட்பட 12 பிரதான விடயங்களை மாற்றுவதாக இருந்தால் மட்டுமே சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்லவேண்டிய நிலை ஏற்படும். எனினும், அந்த 12 விடயங்களில் மாற்றம் ஏற்படாது என தெரியவருகின்றது.

# யாழ்.மாநகர சபை எல்லைக்குள் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி

## நேற்றைய கூட்டத்தில் தீர்மானம்

**யாழ்ப்பாணம்,ஜன. 14**

**யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் புதிய முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி அமைப்பது உள்ளிட்ட மூன்று தீர்மானங்கள் நேற்றைய சபை அமர்வில் நிறைவேற்றப்பட்டுள்ளன.**

யாழ்.மாநகர சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான முதலாவது அமர்வு நேற்று மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது கடந்த 8ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடித்து அழிக்கப்பட்டமைக்கு கண்டனம் வெளியிடப்பட்டது.

அத்துடன் நினைவுத் தூபி இடித்து அழிக்கப்பட்டமையை கண்டித்து சபை அமர்வு ஐந்து நிமிடங்கள் ஒத்திவைத்தல், யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் இராணுவம் மற்றும் பொலிஸார் உள்நுழைந்தமையை கண்டித்தல் மற்றும் மாநகர சபை எல்லைக்குள் புதிய முள்ளிவாய்க்கால் நினைத் தூபி அமைத்தல் ஆகிய மூன்று தீர்மானங்கள் நேற்று நிறைவேற்றப்பட்டன.

இதன்போது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் முடிவை மாநகர சபை முன்னாள் முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்தார்.

அவர் தெரிவிக்கையில்-

இலங்கையில் தமிழ் மக்களின் உரிமைப்போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து உரிமைக்காகப் போராடிய அனைவரையும் நினைவு கூரும் வகையில் ஒரு பொதுவான நினைவுத் தூபி அமைக்கப்படவேண்டும். இதுவே எமது கட்சியின் நிலைப்பாடு.

அந்தவகையில் யாழ் பல்கலைக்கழக மாணவன் விஜிதரன் படுகொலை மற்றும் அவருக்கு நீதி கேட்டு போராடிய விமலேந்திரன் உள்ளிட்ட மாணவர்களும் இதில் உள்வாங்கப்பட வேண்டும்-என்றார்.

தொடர்ந்து சபையின் ஏனைய உறுப்பினர்கள் தமது கருத்துக்களை தெரிவித்ததை அடுத்து முதல்வர் சபை அமர்வை ஐந்து நிமிடங்களுக்கு ஒத்தி வைத்தார்.

ஐந்து நிமிடத்தின் பின்னர் ஏனைய விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக சபை அமர்வு ஆரம்பிக்கப்பட்டது.

(அ-03)





# இரணைமடுக்குளத்திலிருந்து தொடர்ந்து நீர் வெளியேற்றம்

## பகுதிகள் நீரில் மூழ்கின

கிளிநொச்சி, ஜன. 14

கிளிநொச்சி, இரணைமடுக்குளத்திலிருந்து தொடர்ந்தும் நீர்வெளியேறி வருவதால் கண்டாவளை பிரசேத்தில் பல பகுதிகள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன.

தொடர்ந்தும் குளத்தின் நீர் மட்டம் 36 அடியைக் கடந்து காணப்பட்டுவருவதால் நீரை வெளியேற்றும் நடவடிக்கையை நீர்ப்பாசனத் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

தற்போதுள்ள அளவில் நீரை தொடர்ந்து வெளியேற்றுவதானால் 36 அடியை நீர் மட்டம் நெருங்குவதற்கு குறைந்தது மூன்று நாட்கள் செல்லும் என நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதைவிட கூடுதலாக நீரை வெளியேற்றினால் மக்கள் அதிகளவில் பாதிப்புக்கு உள்ளாக வேண்டிய ஏற்படலாம் என்பதால் நீர்வெளியேற்றும் அளவை மட்டுப்படுத்தி வைத்திருப்பதாக அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தில் 635 குடும்பங்களைச் சேர்ந்த இரண்டாயிரத்து 108 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது. அத்துடன், 15 வீடுககள் பகுதியளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த புள்ளி விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, நேற்று காலை வரையான புள்ளி விவரங்களின் அடிப்படையில், கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் 262 குடும்பங்களைச் சேர்ந்த 935 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 13 தற்காலிக வீடுகள் பகுதி அளவில் சேதமடைந்துள்ளன.

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் 91 குடும்பங்களைச் சேர்ந்த 302 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஒரு தற்காலிகாக வீடு சேதமடைந்துள்ளது.

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் 88 குடும்பங்களைச் சேர்ந்த 263 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஒரு வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

இதேவேளை, பச்சிலைப்பள்ளி பிரதே செயலாளர் பிரிவில் 194 குடும்பங்களைச் சேர்ந்த 608 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.



# அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கருத்தோவிய கவனயீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜன. 14

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி குரலற்றவர்களின் குரல் அமைப்பினரால் நேற்று யாழ்ப்பாணம் மாநகர் பகுதியில் கருத்தோவிய கவனயீர்ப்பு நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

இந்தக் கவனயீர்ப்பு நிகழ்வில் குரலற்றவர்களின் குரல் அமைப்பின் இணைப்பாளர் மு.கோமகன் அரசியல் கைதிகளின் உறவுகள் சார்பாக ஊடகங்களிடம் தெரிவித்ததாவது

இந்த தைப்பொங்கலுக்கேனும் அரசியல் கைதிகளான எமது உறவுகள் சிறை மீண்டு வருவார்கள் என இருந்த குடும்ப உறவுகளின் கனவு பொய்த்து போனதொருபொழுதில் குரலற்றவர்களின் குரலாகிய நாம் கருத்தோவிய கவனயீர்ப்பை நடத்தவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறோம்.

அடுத்து ஜனாதிபதி ஆட்சிப்பீடம் ஏறிய நாள் முதல் பல கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கி வருகிறார். கடந்த வாரம் கூட ஆயுதங்களை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டிருந்த மாளிகாவத்தை போதிராஜ ராம விகாரை விகாராதிபதி ஊவத்தேனை சுமண தேரருக்கு பொது மன்னிப்பு அளித்து விடுதலை செய்துள்ளார் ஜனாதிபதி.

ஆனாலும்கூட கடந்த 21 ஆண்டுகளாக தமிழ் அரசியல் கைதியான இந்துமத குரு ரகுபதி சர்மா சிறையில் வாடுகிறார் என்பதை ஜனாதிபதி மறந்துவிட்டாரா என்ற விடயம் கவலையளிக்கின்றது.

இவர் கொரோனா தொற்றால் கடுமையாக பாதிக்கப்பட்டு நடமாட முடியாமல் தள்ளாடும் நிலையில் இருப்பதாக உறவினர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஆகவே ஒரே நாடு ஒரே சட்டம் ஒரே நீதி என்று அடிக்கடி கூறும் அரசு பன்நெடுங்காலமாக சிறையில் சீரழிந்துகொண்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் மீது கருணை காட்டவேண்டும். அவர்களும் சமூகத்துடன் இணைந்து வாழ ஓர் சந்தர்ப்பமேனும் வழங்க வேண்டும்.

கடந்த 7 வருடங்களாக இது நாள் வரையும் சிறைக்குள் பன்னிரெண்டுக்கு மேற்பட்ட அரசியல் கைதிகள் துன்பகரமாக உயிரிழந்துள்ளனர்.

மீதமுள்ளவர்களையாவது உயிருடன் சிறை மீட்டு உறவுகளுடன் ஒப்படைக்க ஓரணியில் திரண்டு ஒற்றுமையாக குரல் கொடுக்க அனைத்து தரப்பினரையும் இருகரம் நீட்டி அழைக்கிறது குரலற்றவர்களின் குரல் அமைப்பு-என்றார்.

# சீனாவுடன் மேலுமோர் ஒப்பந்தத்தில் இலங்கை

கொழும்பு, ஜன. 14

சீனாவுடன் மேலும் ஓர் ஒப்பந்தத்தில் இலங்கை கைச்சாத்திடவுள்ளது. ஒன்லைன் மூலம் தேயிலையை சந்தைப்படுத்துவதற்கான ஒப்பந்தமே இவ்வாறு கைச்சாத்திடப்படவுள்ளது.

இதன்மூலம், இலங்கையின் தூய தேயிலை, சீனாவுக்குள் ஒன்லைன் மற்றும் ஒவ்லைன் தளங்களில் விற்பனை செய்யப்படும்.

இலங்கை தேயிலை சபை, சீனாவின் பென்னி தேயிலை நிறுவனத்தின் துணை நிறுவனமான புஜியன் ஸ்ரார் சீனா சர்வதேச வர்த்தக நிறுவனம் ஆகியன இதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும். இதற்கான அனுமதியை அமைச்சரவை அளித்துள்ளது.

பென்னி தேயிலை நிறுவனம் ஏற்றுமதி - இறக்குமதியுடன், இணைய வர்த்தகத்திலும் ஈடுபட்டுள்ளது. சீனாவில் 5ஜி ஒன்லைன் சந்தைப்படுத்தல் தளத்தை உருவாக்கவும் அந்த நிறுவனம் ஓர் ஒப்பந்தம் ஒன்றை செய்துள்ளது.

சீனாவில் இலங்கையின் தேயிலை விற்பனையுடன், விளம்பரப்படுத்தல், சந்தைப் படுத்தலுககும் அந்த நிறுவனம் ஒப்புதல் அளித்துள்ளது.

இலங்கை ஏற்கனவே சீனாவுடன் பல ஒப்பந்தகளில் கைச்சாத்திட்டுள்ளது. முக்கியமாக தொழில்நுட்பம், உள்கட்டமைப்பு மேம்பாடு, பாதுகாப்பு மற்றும் நிதி ஆகியவற்றில் இந்த ஒப்பந்தங்கள் இடம்பெற்றுள்ளன. (ஐ)



# இலங்கைக்குள் நுழைந்தது புதிய வீரியமிக்க வைரஸ்!

## நோயாளி அடையாளம் காணப்பட்டார்

கொழும்பு, ஜன. 14

**பிரிட்டனிலும் தென்னாபிரிக்காவிலும் பரவிவருகின்ற வீரியமிக்க ஆபத்தான கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்ட வெளிநாட்டவர் ஒருவர் இலங்கையில் அடையாளம் காணப்பட்டுள்ளார்.**

சுகாதார சேவைகள் பிரதி இயக்குநர் ஹேமந்த ஹேரத் இதனை தெரிவித்துள்ளார்.

பிரிட்டனில் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய வீரியமிக்க கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்டவரே கண்டுபிடிக்கப்பட்டுள்ளார் என அவர் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட நபருடன்தொடர்பிலிருந்த அனைவரையும் கட்டாய பி.சி.ஆர் சோதனையை முன்னெடுக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளதாக ஹேமந்த ஹேரத் கூறினார்.

பொதுமக்களை இது குறித்து தேவையற்ற அச்சத்திற்குள்ளாக வேண்டியதில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

# கொரோனா தடுப்பூசி கோரி சீனாவுக்கு ஜனாதிபதி கடிதம்



கொழும்பு, ஜன. 14

கொரோனா வைரஸ் தடுப்பூசியை வழங்குமாறு கோரும் கடிதமொன்றை இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சீன ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளார்.

சீனாவுக்கான புதிய இலங்கைத் தூதுவர் பாலித கோஹன்ன இதனை குறிப்பிட்டார்.

சீனாவின் வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த அதிகாரியொருவரை சந்தித்த வேளை பாலித கோஹன்ன இதனை கூறியுள்ளார்.

இலங்கையின் தற்போதைய பொருளாதார அரசியல் நிலவரம் மற்றும் சீனாவில் தனது முன்னுரிமைகள் குறித்து பாலித கோஹன்ன தெளிவுபடுத்தியுள்ளார்.

இதன்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கொரோனா தடுப்பூசிகளை வழங்குமாறு வேண்டுகோள் விடுத்து சீனாவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதம் குறித்து பாலித கோஹன்ன குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை ஜனாதிபதியிடமிருந்து சீன ஜனாதிபதிக்கு விசேட பரிசொன்றையும் செய்தியொன்றையும் கொண்டு வந்ததாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

# போர்க்குற்ற ஆதாரங்களை கொடுத்துள்ளார் ஜனாதிபதி

## ஹெல பொது சவிய அமைப்பு விசனம்

கொழும்பு, ஜன. 14

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க ஜனாதிபதியே வலுவான ஆதாரங்களை கொடுத்துள்ளார் என ஹெல பொது சவிய என்ற பௌத்த அமைப்பு எச்சரித்துள்ளது.

எதிர்க்கட்சி உறுப்பினரை இலக்கு வைத்து, ஜனாதிபதி வெயியிட்ட அச்சுறுத்தலான கருத்தானது, இலங்கை ஆயுதப்படைகள் மற்றும் தளபதிகள் இழைத்ததாகக் கூறப்படும் யுத்தக் குற்றச்சாட்டுக்களை நிரூபிக்கக் கூடிய சட்சியாக அமைந்துள்ளது என ஹெல பொது சவிய அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ, ஜனாதிபதியின் முழுப்பெயரைச் சுட்டிக்காட்டி வெளியிட்ட கருத்துக்கு பதிலளிக்கும் வகையில் அம்பாறையில் இடம்பெற்ற நிகழ்வில் கோபமாக கருத்து வெளியிட்ட ஜனாதிபதி,

"நான் இறுதியில் பிரபாகரனை கொன்று இழுத்து வந்தேன். அந்த நிலைக்கு என்னால் வர முடியும். எதற்கும் தயாராக இருக்கும் ஒரு கதாபாத்திரம் நான்" என்று கூறியிருந்தார்.

கோட்டாபய ராஜபக்ஷவின் கருத்ததானது, இல்லாத பிரச்சினைகளை வரவழைப்பது போன்றது என ஹெல பொது சவிய அமைப்பின் தலைவர் புதுகல ஜினவன்ச தேரர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் அறிக்கை வெளிநாட்டு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டால்ஏற்படக்கூடிய ஆபத்தையும்ஜினவன்சதேரர்சுட்டிக்காட்டியுள்ளார். "இந்த கருத்து நமது ஆயுதப் படைகளின் தளபதியும், நமது நாட்டின் தளபதியும் போர்க்குற்றங்களைச் செய்தார்கள் என்ற குற்றச்சாட்டுக்கு ஒரு வலுவான சான்றாகும்.

எங்கள் ஜனாதிபதி ஒரு தகவல் தொழில்நுட்பப் பட்டதாரி, இது போன்ற விடயங்களை இன்று எந்த மொழியிலும் மொழிபெயர்க்க முடியும் என்பதை அறிவார்.

ஐ.நா மனித உரிமைகள் ஆணைக் குழுவில் ஜனாதிபதியின் உரை முன் வைக்கப்பட்டால் இது இல்லாத பிரச்னையை தோற்றுவிக்கும் விடயமாக மாறும். தமிழ் புலம்பெயர்ந்தோருக்கு இது மற்றொரு விதை. முப்படையினர் யுத்தக் குற்றங்களை இழைத்தனர் என்பதை நிரூபிப்பதற்கான சாட்சி இது. எந்தவொரு விவேகமுள்ள ஆட்சியாளரும் இத்தகைய அறிக்கையை வெளியிடக்கூடாது" என்று ஜினவன்ச தேரர் கூறினார்.

# விரைவில் நடக்கவுள்ள அமைச்சரவை மாற்றம்

கொழும்பு, ஜன. 14

அடுத்த பாராளுமன்றக் கூட்டத்தொடர் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர், அமைச்சரவையில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படலாம் என அரசாங்கத்தின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சரவை மாற்றம், கடந்த டிசெம்பர் மாதம், இடம்பெறவிருந்தது. எனினும், சில காரணங்களால் அது பிற்போடப்பட்டது. இந்நிலையில், இம்மாதம் 19ஆம் திகதிக்கு முன்னர், அமைச்சரவை மாற்றம் செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, நீதியமைச்சர் அலி சப்ரி, தனது அமைச்சர் பதவியை இராஜினாமா செய்யவிருந்தார் எனத் தகவல்கள் வெளியாகியிருந்தன. அத்துடன், அவரைப் பதவியிலிருந்து இராஜினாமா செய்யுமாறும், அவரைக் கைது செய்யுமாறும் பௌத்த அமைப்புகள் சில, ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் அண்மையில் ஈடுபட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# தனிமைப்படுத்தல் சட்டம் வவுனியாவில் மீறப்பட்டதா?

## மதுபானச்சாலை உட்பட வர்த்தக நிலையங்கள் திறப்பு




வவுனியா, ஜன. 14

வவுனியா மாவட்டத்தில் சில பகுதிகள் 14 நாட்கள் தனிமைப் படுத்தல் சட்டம் அமுல்படுத்தப் பட்டுள்ளதாக தெரிவித்தபோதிலும் நேற்று தனிமைப்படுத்தப் பட்ட பகுதிகளில் நடவடிக்கைகள் வழமைபோன்று இடம்பெற்றன.

வவுனியா நகரை அண்மித்த நெளுக்குளம், தாண்டிக்குளம், பூந்தோட்டம், மூன்றுமுறிப்பு, மடுக்கந்தை ஆகிய பகுதிகளில் சோதனை நிலையங்களை அமைப்பதுடன் அந்தப்பகுதிகளுக்குள் 24ஆம் திகதிவரை முடக்க நிலைமையை ஏற்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. இந்தத் தீர்மானம் வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற அவசர கூட்டத்திலேயே எட்டப்பட்டது.

ஆயினும் முடக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்ட வவுனியா குழுமாட்டுச் சந்தி, வேப்பங்குளம், புதிய பஸ்நிலையத்தைஅண்மித்த பகுதி, வைத்தியசாலை சந்தி என பல பகுதிகளில் நேற்று வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டு வியாபார நடவடிக்கைகள் இடம்பெற்றதுடன் சில மதுபான சாலைகள், வங்கிகளும் திறக்கப்பட்டன.

முடக்கப்பகுதி என்று அறிவிக்கப்பட்ட பகுதிகளில் பாதுகாப்புப் பிரிவினரும் கடமையில் ஈடுபடுத்தப்படவில்லை என்பதுடன் பாதுகாப்பு அரண்கள் எவையும் போடப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் பொலிஸ் உயர் அதிகாரிகள், இராணுவ உயர் அதிகாரிகள், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச திணைக்களங்களின் உயர் அதிகாரிகள், வர்த்தக சங்கத்தினர், ஓட்டோச் சங்கத்தினர், சுகாதாரப் பிரிவினர், சமயத் தலைவர்கள், கல்வி திணைக்கள அதிகாரிகள் என பலரும் கலந்துகொண்டு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு நேற்று முன்தினம் மாலை பொலிஸார் மூலம் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டதுடன் மக்களும் வீடுகளுக்கு செல்லுமாறு பொலிஸாரால் பணிக்கப்பட்டனர்.

இந்நிலையில் நேற்று அந்தத் தீர்மானம் செயற்படுத்தப்படாமையால் வவுனியா மாவட்டம் வழமை போன்று செயற்பட்டது.

# 97 இலங்கையர் நாடு திரும்பினர்

கொழும்பு, ஜன. 14

கொரோனா தொற்று காரணமாக வெளிநாடுகளில் சிக்கியுள்ள 197 இலங்கையர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தை நேற்று வந்தடைந்தனர்.

அதன்படி, மாலைதீவிலிருந்து 10 பேரும், கட்டாரிலிருந்து 114 பேரும், ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து 73 பேரும் கட்டுநாயக்க விமான நிலையத்தை நேற்று காலை வந்தடைந்தனர் என கொவிட்-19 தடுப்பிற்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு நாட்டை வந்தடைந்த அனைவருக்கும் பி.சி. ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு பின்னர் அனைவரும் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளனர்.



ஈழநாடு



# என் மீது வீண்பழிகளை சுமத்தி சிறையிலடைத்தது கூட்டமைப்பு

## பிள்ளையான் எம்.பி. கொதிப்பு



மட்டக்களப்பு,ஜன.14

**நான் ஜோசப் பரராஜசிங்கம் என்பவரை கண்டதே கிடையாது. இவ்வாறான நிலையில் அவரைக் கொலை செய்தேன் என, என் மீது வீண்பழிகள் சுமத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிறையில் அடைத்தது என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சித் தலைவர் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்துள்ளார்.**

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

பல அட்டூழியங்களை நல்லாட்சி அரசாங்கம் செய்தபோது, அதனைக் கண்டு கொள்ளாதவர்கள் இன்று ஊடக தர்மம், சட்டம் ஒழுங்கு, பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பில் குரல் கொடுக்கின்றனர். பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உருவாக்கியவர்கள் என்னைத் தண்டிக்க வேண்டும், மற்றவர்களை விடுதலை செய்ய வேண்டும் என இரட்டை முகத்தைக் காட்டுகின்றனர்.

ஜோசப் பரராஜசிங்கம் 2005 ஆம் ஆண்டு வெற்றிபெற்றார். விடுதலைப் புலிகள் அன்றைய காலத்தில் வெற்றிபெற்றவர்களை கொலை செய்துவிட்டு வேறு நபர்களை நியமனம் செய்தனர். அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த பலர் உள்ளனர். இதுதொடர்பில் எந்தவித விசாரணைகளும் இடம் பெறவில்லை- என்றார். (எ)

# போதைப்பொருள் கடத்தல்காரர் சித்திக்கின் சகாக்கள் சிக்கினர்

## பெருந்தொகை பணம், தங்கம் மீட்பு



கொழும்பு,ஜன.14

கொழும்பு கிராண்ட்பாஸ் பகுதியில் போதைப் பொருள் கடத்தல் மூலம் சேர்த்து வைக்கப்பட்டிருந்த ஒரு கோடியே 26 இலட்சத்து 43 ஆயிரம் ரூபா பணம் மற்றும் 40 பவுண் தங்கத்துடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களுள் ஒருவர் 'சித்திக்" எனப்படும் பிரபல போதைப்பொருள் கடத்தல்காரரின் உதவியாளர் என்று தெரியவந்துள்ளது என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

கிராண்ட்பாஸ் பகுதியில் சட்டவிரோதமான முறையில் பெருந்தொகை பணம் மற்றும் தங்கத்தை வைத்திருந்தமை தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேக நபர்கள் தமது வீட்டில் பை ஒன்றுக்குள் பணத்தையும் தங்கத்தையும் மறைத்து வைத்திருந்துள்ளதுடன், அவற்றை பெற்றுக்கொண்ட முறை தொடர்பில் உரிய ஆதாரங்கள் இல்லாமையால் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அவர்களைக் கைது செய்துள்ளனர்.

இதன்போது அவர்களிடமிருந்து ஒரு கோடியே 26 இலட்சத்து 43 ஆயிரம் ரூபா பணம் மற்றும் 40 பவுண் தங்கமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களுள் ஒருவர், போதைப்பொருள் கடத்தல் செயற்பாடுகளில் முதல் நிலையில் உள்ள பிரபல போதைப் பொருள் கடத்தல்காரரான 'சித்திக்" என்பவரின் உதவியாளர் என்றும் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்களுக்கு எதிராக கறுப்புப் பணச்சுத்திகரிப்புச் சட்டம் மற்றும் போதைப் பொருள் சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். யாராவது தன்னிடமுள்ள பணம் அல்லது சொத்து தொடர்பில் உரிய ஆதாரங்களைக் காண்பிப்பதற்கு தவறினால் அந்தப் பணம், மனித கடத்தல், போதைப் பொருள், துப்பாக்கி, மதுபானம் போன்ற சட்டவிரோத கடத்தல் செயல்பாடுகள் மூலம் ஈட்டப்பட்ட பணமாகவே கருதப்படும். அதனால், அத்தகைய நபர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இந்நிலையில், மேற்படி சந்தேகநபர்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் முன்னெடுத்து வருகின்றனர்- என்றார். (எ)

# 9 தாதிய மாணவர்கள் உட்பட 12 பேருக்கு கொரோனா உறுதி

மட்டக்களப்பு,ஜன.14

மட்டக்களப்பு தாதியர் பயிற்சிக் கல்லூரி மாணவர்கள் 9 பேர் உட்பட 12 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்களுக்கு தொற்றுள்ளமை நேற்று அதிகாலை வெளியான பி.சி.ஆர். பரிசோதனையில் கண்டறியப்பட்டுள்ளது என மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நா. மயூரன் தெரிவித்தார்.

தாதியர் பயிற்சிக் கல்லூரி மாணவர்களுக்கும், ஏனையோருக்கும் மேற்கொள்ளப்பட்ட 132 பி.சி.ஆர். பரிசோதனையில் தாதியர் பயிற்சிக் கல்லூரி மாணவர்கள் 9 பேருக்கும் வெல்லாவெளி சுகாதாரப் பிரிவில் 3 பேர் உட்பட 12 பேருக்கு தொற்று உறு செய்யப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் நாளாந்தம் தொற்றாளர் எண்ணிக்கை அதிகரித்து செல்கின்றமையால், பொதுமக்கள் தொடர்ந்தும் சுகாதார வழிமுறைகளைப் பேணி அவதானமாக செயல்படுமாறு அவர் கேட்டுக்கொண்டார். (எ)

# சஹ்ரான் மனைவிக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு,ஜன.14

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரி சஹ்ரான் ஹாசிமின் மனைவி உள்ளிட்ட 12 பேரை எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு கோட்டை நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது. (எ)




# கொழும்பு துறைமுக கிழக்கு முனையத்தை விற்கமாட்டோம் என உறுதி வேண்டும்

## ஜனாதிபதியிடம் கோருகிறார் அநுகுமார

கொழும்பு,ஜன.14

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை வெளிநாடுகளுக்கு ஒருபோதும் விற்பனை செய்யப்போவதில்லை என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தொழில்சங்கங்கள் முன்னிலையில் உறுதியளிக்க வேண்டும் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க வலியுறுத்தினார்.

நாட்டில் கொரோனா வைரஸ் பரவலடைந்து வந்தாலும், நாட்டின் வளங்கள் விற்பனை செய்யப்படுவதையும், கொள்ளையிடுவதையும் ஆளும் தரப்பினர் நிறுத்தப் போவதில்லை. அதனால் நாட்டின் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கு மக்கள் அனைவரையும் முன்வருமாறும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

காலி முகத்திடலில் கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை விற்பனை செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

நாட்டின் பொருளாதார இதயத்தை இந்திய நிறுவனத்துக்கு விற்பனை செய்ய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முயற்சித்து வருகின்றார். இதனைத் தடுத்து எமது எதிர்காலத் தலைமுறையினருக்கு பாதுகாத்துக் கொடுப்பதற்காகவே நாம் இன்று இவ்வாறு ஒன்றுகூடியுள்ளோம். 1978 ஆம் ஆண்டு தொடக்கம் மக்கள் அரசாங்கங்களை அமைத்து வருகின்றனர். ஆனால் அவை அரசாங்கமல்ல ஒவ்வொன்றும் ஒவ்வொரு கோத்திர சமூகங்களே.

இந்நிலையில் மக்களால் முதன் முதலாக உருவாக்கப்பட்டது ஜே.ஆர். ஜெயவர்த்தன என்ற கோத்திர சமூகமாகும். இவர்கள் எமது நாட்டிலுள்ள தொழில்சாலைகள் மற்றும் தோட்டங்களை வெளிநாட்டவருக்கு விற்பனை செய்தார்கள். பின்னர் பிரேமதாஸ என்ற கோத்திர சமூகம் உருவாக்கினர். அவர்கள் நாட்டின் முக்கியமான தொழில்சாலைகளை விற்பனை செய்தார்கள். அதனைத் தொடர்ந்து பண்டாரநாயக்கா, சந்திரிகா என்னும் கோத்திர சமூகத்தை அமைத்தார்கள். அவர்கள் எயர்லங்கா நிறுவனம், பால்மா உற்பத்தி நிறுவனங்கள் உள்ளிட்ட வணிக நிறுவனங்களை விற்பனை செய்தனர்.

அதற்கும் பிறகு, விக்கிரமசிங்க என்ற கோத்திர சமூகம் உருவாக்கப்பட்டது. அது அம்பாந்தோட்டை துறைமுகத்தை விற்பனை செய்ததுடன் நிறுத்தாமல் கொழும்பிலுள்ள பெறுமதிமிக்க இடங்களை விற்பனை செய்வதற்கு திட்டம் தீட்டியிருந்தது. இதனைத் தொடர்ந்து ராஜபக்ஷ என்ற கோத்திர சமூகம் அமைக்கப்பட்டது. அது எமக்கு முன்னால் அமைக்கப்பட்டுள்ள துறைமுக நகரத்தை 90 வருடங்கள் வரை சீனர்களுக்கு ஒப்படைத்துள்ளது. மேலும், சங்கரில்லா ஹோட்டலுக்கு முன்னால் காணப்பட்ட 10 ஏக்கர் நிலத்தையும் விற்பனை செய்துள்ளது. - என்றார். (எ)

# பண்டைத் தமிழ்மக்களின் பாரம்பரிய பண்பாட்டுத் திருநாளே பொங்கல் திருநாள்



மதுரை காரை
எம்.பி.அருளானந்தன்

## "நன்றி தெரிவிக்கும் திருநாள்"

பொங்கல் திருநாள் நமது நாட்டில் கொண்டாடப்படும் பண்டிகைகளிலேயே ஒரு மாறுபட்ட திருநாளாக விளங்குகின்றது. இந்தத் திருநாள் ஆசைகளை விதைத்து கடவுளரைப் போற்றிப் பலன்களை எதிர்பார்த்துக் கொண்டாடும் நாளல்ல, இந்நாள் நம் உழவர்கள் தங்கள் உழைப்பால் கிடைத்த பலனுக்குத் துணையாக இருந்த இயற்கையைப் போற்றி சூரியனை வணங்கி நன்றி தெரிவிக்கும் திருநாளாகவும் தனது உழவுத் தொழிலுக்குத் துணை நின்ற மாடுகளுக்கும் மற்றக் கால் நடைகளுக்கும் நன்றி தெரிவிக்கும் பொன்னாளாகவும் விளங்குகிறது.

### அறுவடைத் திருநாள்

"உழவர் உலகத்துக்கு ஆணி" என்று திருவள்ளுவர் போற்றிப் பாடிய உழவர் பெருங்குடிமக்கள், தாங்கள் வயலில் பாடுபட்டு உழைத்த உழைப்பையெல்லாம் கூட்டி இவ்வுலகினர் அனைவரும் பசியாற படைத்த பொருள்களை அறுவடைசெய்து பதப்படுத்தி தங்கள் இல்லங்களுக்குக் கொண்டு செல்லும் காலத்தை நினைவுறுத்திக் கொண்டாடப்படும் அறுவடைத் திருநாளாகவும் விளங்குகின்றது.

### இயற்கைக்கு நன்றி தெரிவிக்கும் தமிழர்களின் கலாசாரத்தை பறைசாற்றும் திருநாள்

இயற்கைக்கு நன்றி தெரிவிக்கும் தமிழர்களின் கலாசாரத்தை உலகிற்கு பறைசாற்றும் இப் பண்டிகையின் முதல்நாள் மார்கழி மாதத்தில் கடைசி நாளன்று "பழையன கழிதலும் புதியன புகுதலும்" காலத்திக் கட்டாயம் என்னும் நன்னூல் சூத்திரத்திற்கேற்ப தங்கள் வீடுகளில் உள்ள பழையவற்றை தேவையற்றனவற்றை தீயிட்டு ஒழித்திடும் நாளாக போகிப் பண்டிகை கொண்டாடப்படுகிறது. தைமுதல் நாளன்று சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் பொங்கல் பண்டிகையும், அதற்கு அடுத்த நாள் தங்களுடன் வயலில் உழைத்த காளை மாடுகளுக்கும் மற்றும் கால்நடைகளுக்கும் நன்றி தெரிவிக்கும் வகையில் மாட்டுப்பொங்கலும், அதற்கு அடுத்த நாள் தங்கள் சுற்றத்தார்களையும், நண்பர்களையும் சந்தித்து மகிழும் வகையில் காணும் பொங்கலும் கொண்டாடப்படுகிறது.

### "பொங்கலோ பொங்கல்"


புதுப் பானையில் பொங்கல் வைத்து பால் பொங்கி வரும் பொழுது அனைவரும் கூடிநின்று "பொங்கலோ பொங்கல்" எனக் குதூகலமாகக் குரலெழுப்பிக் கதிரவனை வணங்குவது வழக்கம்.

இத்தகு தைத்திருநாள் தமிழர்களுக்கு நிரந்தரமான தீர்வுக்கு வழிகாட்ட வேண்டுமென யாவரும் பிரார்த் தனை செய்து தைமகளை வாஞ்சையோடு வரவேற்று மகிழ்ந்து மாண்புடன் வாழ்வோமாக.









## நல்லூரான் செம்மணி வளைவு
### கந்த புராண கலாசார விழுமியச் சின்னம்

– மதுரகவி –

நல்லூரான் செம்மணி வளைவு
நற்றமிழ் பதியிலெழுந்த வாசல் கதவு
எல்லோரின் விருப்புக்கு வடிவங்கொடுத்தெழுந்தது
எழிலார்ந்த தமிழ்க் கடவுள் நல்லூரான் திருவருளோடு
வல்லமைச் செழிப்போடு கந்தபுராண விழுமியம் திகழ
வாஞ்சைக்குரிய செம்மணியில் நிமிர்ந்தது வளைவு
நல்லன் மலியும் புனித சைவ நெறியில்
நயங்களைப் பெருக்கிய நல்லூரான் வளைவு
எல்லைகாண் அழகோடு எங்கள் தேசத்தில் நிமிர்ந்தது
யாழ்ப்பாண கந்தபுராண கலாசார நெறிகளை
நயம்பட தாங்கி யெழுந்தது நல்லூரான் வளைவு
வாழ்வாங்கு வாழும் நெறிகளின் இலக்கணமாய்
வனப்புடன் திகழும் வளைவு வட புலத்திலெழுந்தது
புகுந்தவர் வரும் பொழுதுகளை பதிந்திடும் மாடமாய்
பொங்கல் திருநாளில் வாசல் திறந்தது வாழி

# மஹாபொல நம்பிக்கை நிதியில் 678 மில்லியன் ரூபா மோசடி!

## விசாரணைக்கு கோப் குழு பரிந்துரை

கொழும்பு,ஜன.14

**மஹாபொல நம்பிக்கை நிதியத்தின் இணையவழி லொத்தர் சீட்டிழுப்பை இடைத்தரகரால் விற்பனை செய்ததன் மூலம் இந்தத் தரப்பால் ஈட்டிக்கொள் ளப்படவேண்டிய 678 மில்லியன் ரூபா மஹாபொல நம்பிக்கை நிதியத்துக்குப் பெற்றுக்கொள்ளப்படவில்லையென அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவில் (கோப்) வெளிப்படுத்தப்பட்டுள்ளது.**



இந்தச்செயல்பாடு மிகப்பெரிய ஊழல் மோசடி என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது கோப்குழு, இது தொடர்பில் சட்டமா அதிபருக்குத் தெரியப்படுத்தி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் மூலம் உரிய விசாரணைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோப் குழுவின் தலைவர் பேராசிரியர் சரித ஹேரத், வர்த்தக அமைச்சின் செயலாளர் ஜே. எம்.பத்ரானி ஜெயவர்த்தனவுக்கு பணிப்புரை விடுத்தார்.

மஹாபொல நம்பிக்கை நிதியத்தின் கீழ் செயல்படும் வரையறுக்கப்பட்ட நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்ட பத்திரங்களின் மூலம் கொடுக்கல் வாங்கல்களால் 2015 - 2016 காலப்பகுதியில் 18 மில்லியன் ரூபா மற்றும் 102 மில்லியன் ரூபா நட்டமும், 2017 ஆம் ஆண்டு நஷனல் வெல்த் கம்பனியின் முதலீட்டைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட மீள்கொள்முதல் பரிவர்த்தனைகளில் 13 மில்லியன் ரூபா நட்டமும் ஏற்பட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டிய கோப் குழுத் தலைவர், இந்த முறைகேடுகள் நம்பிக்கை நிதியத்துக்குப் பாரிய நட்டத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

உரிய நபர்களுக்கு உரிய தண்டனையைப் பெற்றுக்கொடுத்த பின்னர் அவற்றைக் கலைப்பதில் எந்தப் பிரச்னையும் இல்லை எனினும், இதுபோன்ற பாரிய முறைகேடுகள் இடம்பெற்றுள்ள நிலையில் எந்த விசாரணைகளும் இன்றி இவற்றைக் கலைப்பது பொருத்தமற்றது என அவர் கூறினார்.

இதற்கமைய மஹாபொல நம்பிக்கை நிதியத்தின் கீழ் உள்ள நிறுவனங்களாக நெட்வெல்த் கோப்ரேஷன் மற்றும் நஷனல் வெல்த் செக்கியூரிட்டீஸ் கம்பனி ஊடாக மேற்கொள்ளப்பட்ட முறைகேடுகள் தொடர்பில் உரிய ஆய்வுகளை மேற்கொண்ட பின்னர், இந்த இரண்டு நிறுவனங்களையும் கோப் குழுவின் முன்னிலையில் அழைப்பதற்கும், இந்த முறைகேடுகள் பற்றி உரிய விசாரணைகளை நடத்தும்வரை அவற்றைக் கலைக்கும் நடவடிக்கைகளை காலதாமதப்படுத்தும் படியும் கோப் குழு, அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கியது.

இலங்கைத் தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் தற்போதைய நிலைமை தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், இந்த நிறுவனம் கோப் குழுவுக்கு அழைக்கப்பட்டிருந்தபோதும் அவ்வாறு வருவதற்கு சட்டரீதியாக கடமைப்பட்டிருக்கவில்லையென நிறுவனத்தின் ஊடாக கோப் குழுவுக்கு அறிவித்திருந்தமை தொடர்பில் கோப் குழு அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்தது. இந்த நிலைமையைத் தெளிவுபடுத்தும் நோக்கில் முதலில் அந்த நிறுவனத்தை கோப் குழுவுக்கு அழைக்க வேண்டும் என்றும் இங்கு தெரிவிக்கப்பட்டது. இதற்கமைய இலங்கைத் தகவல் தொழில்நுட்ப நிறுவனம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனம் என்றும், அந்நிறுவனம் தொடர்பில் மேலும் கலந்துரையாடல்களை நடத்த உள்ளக அறிக்கையொன்றைத் தயாரித்து பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த பின்னர் இதுதொடர்பில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் தீர்மானத்துக்கு வருவது பொருத்தமானது என்றும் கோப் குழு சுட்டிக்காட்டியது.

அத்துடன், உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் கணக்காளர் ஆகியோர் நிறுவனத்தில் இல்லையென்பதும் இங்கு புலப்பட்டது. கூடிய விரைவில் இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கோப் குழு வலியுறுத்தியது. மஹாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தின் முதலீடுகளை முகாமைத்துவம் செய்வது தொடர்பில் விசேட கணக்காய்வு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டும், குறித்த நம்பிக்கை நிதியத்தின் செயற்றிறன் அறிக்கை மற்றும் கணக்காய்வாளர் நாயகத்தால் முன்வைக்கப்பட்ட விசேட அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு கோப் குழுவின் முன்னிலையில் கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டிருந்தது. (எ)

## தனிமைப்படுத்தலை மீறிய மேலும் 24 பேர் கைது

அஜித் ரோஹண தகவல்

கொழும்பு,ஜன.14

முகக்கவசம் அணியத்தவறியமை மற்றும் சமூக இடைவெளியைப் பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டுக்களின் கீழ் நேற்றுக்காலை 9 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் மேலும் 24 பேர் கைது செய்யப்பட்டனர்.

கடந்த ஒக்ரோபர் 30 ஆம் திகதியிலிருந்து மேற்படி குற்றச்சாட்டின் பேரில் இதுவரை 2 ஆயிரத்து 462 பேர் கைது செய்யப்பட்டனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (எ)

## 20 கிலோ ஹெரோயின் காட்டுக்குள் கண்டுபிடிப்பு



கொழும்பு,ஜன.14

கொஸ்கொடை பகுதியில் கைவிடப்பட்டிருந்த 20 கிலோ கிராம் ஹெரோயின் போதைப் பொருள்களை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைப்பற்றியுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப்பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது, கொஸ்கொடை வனப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இந்த போதைப் பொருள் மீட்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, ஹெரோயின் தொகையை இவ்வாறு மறைத்து வைத்தவர்கள் தொடர்பிலும், இதனை நாட்டுக்குள் கடத்தி வந்தவர்கள் தொடர்பிலும் இரகசிய விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. இந்நிலையில் இந்த ஹெரோயின் போதைப்பொருள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக, போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தென் மாகாணத்துக்குள் போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் சுற்றி வளைப்புக்கமைய இதுவரை யில் சுமார் 200 கிலோ கிராம் போதைப் பொருள் வரை கைப்பற்றப்பட்டுள்ளன. (எ)



## தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு 100 இந்து ஆலயங்களுக்கு நிதியுதவி

கொழும்பு,ஜன.14

பின்தங்கிய மாவட்டங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 100 இந்து ஆலயங்களுக்கு தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலைகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் அலரிமாளிகையில் இடம்பெற்றது.

புத்தசாசன மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் என்ற வகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் எண்ணக்கருவுக்கு அமைய இந்த காசோலைகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இந்தக்காசோலைகளை ஆலயங்களுக்கு வழங்குவதனை அடையாளப்படுத்தும் வகையில் நேற்று முன்தினம் கொழும்பு, களுத்துறை, இரத்தினபுரி, கேகாலை மற்றும் கம்பஹா ஆகிய பகுதிகளின் ஆலயங்களுக்கு காசோலைகள் வழங்கப்பட்டதுடன், ஏனைய ஆலயங்களுக்கு காசோலை வழங்கும் நடவடிக்கை மாவட்ட ரீதியில் முன்னெடுக்கப்படும்.

இந்நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன், பிரதமரின் பெருந்தோட்டத் துறைக்கான ஒருங்கிணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இதற்கு முன்னர் நவராத்திரி தினத்தில் நாடளாவிய ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட 40 ஆலயங்களுக்கு பிரதமரின் ஆலோசனைக்கமைய 50 ஆயிரம் ரூபா வீதம் காசோலைகள் வழங்கப்பட்டிருந்தன. (எ)

## டெங்கு ஒழிப்பு உதவியாளர்கள் நேற்று ஆளுநர் அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.14

டெங்கு ஒழிப்பு உதவியாளர் சங்கத்தினரால் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பு நேற்றுக்காலை கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி இவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டமானது நாடளாவிய ரீதியில் டெங்கு ஒழிப்பு உதவியாளர்களால் நேற்று முன்னெடுக்கப்பட்டது. (எ)





கிருபா லேணர்ஸ்
KIRUBAA LEARNERS
அரச அங்கீகாரம் பெற்ற வடக்கின் முதல்தர
கனரக சாரதிப் பயிற்சி பாடசாலை

விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
இரவு நேர வாகனப் பயிற்சி.
தவணை முறைக் கட்டணங்கள்.
சகல கிளைகளிலும் வாகனப் பயிற்சி.
விசேட பரீட்சை ஒழுங்குகள்.

வடக்கின் No 1 KIRUBAA சாரதிப் பயிற்சி பாடசாலை

-தலைமைக் காரியாலயம்-
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353, 0777 225 292

| | | | |
|---|---|---|---|
| சுன்னாகம். 021 224 2022, | ஆவரங்கால். 021 222 6688 | வவுனியா. 024 222 7777 | பூநகரி. 070 333 7171 |
| பருத்தித்துறை. 021 226 1100 | நெல்லியடி. 021 226 0700 | கிளிநொச்சி. 021 228 5505 | முழங்காவில். 070 333 6161 |
| கச்சேரி 021 222 6699 | சாவகச்சேரி. 021 227 0700 | விசுவமடு. 021 320 1515 | மன்னார். 023 225 1656 |

# மரண அறிவித்தல்

## கதிரவேலு செல்லப்பா (செல்வராசா)

**(பரந்தன் இரசாயன கூட்டுத்தொழிற்சாலையின் முன்னாள் உத்தியோகத்தர்)**

மலர்வு :- 21.07.1945 உதிர்வு:- 11.01.2021



*சிறுப்பிட்டி வடக்கை பிறப்பிடமாகவும் கனடா ரொறன்ரோவை வசிப்பிடமாகவும், பரந்தன் இரசாயன கூட்டுத்தொழிற்சாலையின் முன்னாள் உத்தியோகத்தருமாகிய திரு கதிரவேலு செல்லப்பா (செல்வராசா) அவர்கள் (11.01.2021) திங்கட் கிழமையன்று மாரடைப்பால் இறைபதமடைந்தார்.*

*அன்னார் அமரர்களான கதிரவேலு காந்தம்மா தம்பதியரின் அன்பு மகனும், அமரர்களான முருகேசு சின்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும், வள்ளியம்மையின் பாசமிகு கணவரும், கந்தசாமி, திருமலர், பாலசுந்தரம், சிவசாமி, சோமசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சத்தியதேவி, சின்னத்துரை, பத்மலோசனா, வசந்தி, தர்சினி, அமரர் கந்தையா, சண்முகம், பொன்னம்மா, சின்னத்தங்கச்சி, அமரர் சிவக்கொழுந்து ஆகியோரின் மைத்துனரும், ரேணுகாதேவி, ரங்கநாதன், செந்தில்நாயகி, கிருபாநந்தி, கோகுலன், ஜானகி (சிறுபிட்டி) ஆகியோரின் மாமனாரும், வேணுதாஸ், லோகவேணி, திருவேணி, தனுசன், ரனோஜா, அபினயா, பிரவீனா, சகானா, எழில்நிலா, இலக்கியன், ஓவியா, ஆகியோரின் பெரியப்பாவும், ஆரன், நிகரன், ஷாக்சவி, ஸ்ருதிகா, ஆதனா, இனியா, ஆதித்தன், ஆதிரா மற்றும் வைஸ்ணவி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (17.01.2021) ஞாயிற்றுக்கிழமை ஸ்காபரோ கனடாவில் இடம்பெறும்.*

*இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.*

**தகவல்: மருமகள்**
**077 500 0410 (இலங்கை)**
**077 828 6867 (இலங்கை)**
**+ 16478573881 (கனடா)**

**சிறுப்பிட்டி வடக்கு,**
**நீர்வேலி.**

# மரண அறிவித்தல்

## சின்னத்துரை குமாரவேல்

**(விவாகப் பதிவாளர், சுன்னாகம் ஐயனார் தேவஸ்தான நிர்வாக சபையின் முன்னாள் தலைவர், சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் தலைவர்)**

பிறப்பு- 01.12.1945 இறப்பு-13.01.2021



*சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை குமாரவேல் அவர்கள் (விவாகப் பதிவாளர், சுன்னாகம் ஐயனார் தேவஸ்தான நிர்வாக சபையின் முன்னாள் தலைவர், சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் தலைவர்) நேற்று (13.01.2021 ) புதன் கிழமை அதிகாலை காலமாகிவிட்டார்.*

*அன்னார் அமரர் திலகவதி (முன்னாள் பொது முகாமையாளர், சுன்னாகம் ப.நோ.கூ.ச) அவர்களின் அன்புக் கணவரும் விதுஷனி(மருத்துவ ஆய்வு கூட தொழில் நுட்ப உத்தியோகத்தர், மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்), ஜெயப்பிரணவன்(கனடா) ஆகியோரின் பாசத்துக்குரிய தந்தையாரும் சுரேஷ்குமார் (பிரதம பொறியியலாளர், யாழ்ப்பாணம் மாநகரசபை), பானுஷா ஆகியோரின் அன்புக்குரிய மாமனாரும் கேதுஷா, கேனிஷா (உடுவில் மகளிர் கல்லூரி தரம் 5 மாணவிகள்) ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் அமரர் வெற்றிவேல் அவர்களின் அன்புச் சகோதரரும் திலகரத்தினம்(கனடா), இலங்கை நாயகம் என்று அழைக்கப்பட்ட அமரர் கிருஷ்ணானந்தன் (ஓய்வுபெற்ற மொழிபெயர்ப்பாளர், இலங்கைப் பாராளுமன்றம்), அமரர் தர்மாவதி ஆகியோரின் அன்புக்குரிய மைத்துனரும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (13.01.2021) புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு சுன்னாகம் நகரத்தில் காங்கேசன்துறை வீதியில் சுன்னாகம் இலங்கை வங்கி அருகிலுள்ள முத்துக்கிருஸ்ணர் ஒழுங்கையில் அமைந்திருக்கும் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 3.00 மணியளவில் சுன்னாகம் மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.*

*இந்த அறிவித்தலை உறவுகள், நண்பர்கள் அனைவரும் தயவுடன் ஏற்றுக் கொள்ளவும்.*

*தகவல்:*
**விது(மகள்)-077 318 0319**
**சுரேஷ்(மருமகன்)-077 413 6193**

ஈழநாடு



# பைடன் பதவியேற்பு நிகழ்வில் ஆயுதப் போராட்டத்துக்கு சதி!

## எவ்.பி.ஐ. எச்சரிக்கை



வாஷிங்டன், ஜன. 14

**அமெரிக்க ஜனாதிபதியாக ஜோ பைடன் பதவியேற்கும்போது பாராளுமன்றத்திலும் மாகாண பேரவைகளிலும் ஆயுதம் தாங்கிய போராட்டம் நடத்த சதித் திட்டம் தீட்டப்படுவதாக அந்த நாட்டின் தேசிய புலனாய்வு அமைப்பு (எவ்.பி.ஐ.) எச்சரித்துள்ளது.**

இதுகுறித்து அந்த அமைப்பினருக்கான இதழில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

அடுத்த ஜனாதிபதியாக ஜோ பைடன் பதவியேற்பதையொட்டி, நாடு முழுவதும் ஆயுதம் தாங்கிய போராட்டத்தை நடத்த சிலர் திட்டமிட்டு வருகின்றனர்.

50 மாகாணங்களின் பேரவைகளிலும் வாஷிங்டனிலுள்ள பாராளுமன்றத்திலும் இந்த ஆயுதப் போராட்டங்களை நடத்துவதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன.

மாகாண பேரவைகளில் வரும் 16ஆம் திகதியிலிருந்து 20ஆம் திகதி வரையும் பாராளுமன்றத்தில் 17ஆம் திகதியிலிருந்து 20ஆம் திகதிக்குள்ளும் ஆயுதப் போராட்டத்தை நடத்த சிலர் திட்டமிட்டு வருகின்றனர் என்று அந்த இதழில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் அடுத்த ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் கடந்த நவம்பர் 03ஆம் திகதி நடைபெற்றது. அந்தத் தேர்தலில் ட்ரம்ப்பை எதிர்த்து ஜனநாயகக் கட்சி சார்பில் முன்னாள் துணை ஜனாதிபதி ஜோ பைடன் போட்டியிட்டார்.

இதில், பைடன் பெரும்பான்மை பெற்றார். ஆனால், ட்ரம்ப் தோல்வியை ஏற்க மறுத்து வருகின்றார். இந்த நிலையில், பைடனின் வெற்றியை பாராளுமன்றம் உத்தியோகபூர்வமாக உறுதி செய்வதற்கான இரு அவைகளின் கூட்டுக் கூட்டம் கடந்த வாரம் நடைபெற்றது.

அப்போது, தனது ஆதரவாளர்களை ட்ரம்ப் வன்முறைக்கு தூண்டி விட்டார். இதில் ஐவர் உயரிழந்தனர். இதையடுத்து நாட்டில் அவசரநிலை பிரகடனம் பிறப்பிக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



# சிரிய ஆயுத கிடங்கு மீது இஸ்ரேல் வான் தாக்குதல்!

டமஸ்கஸ், ஜன. 14

கிழக்கு சிரியாவின் ஆயுதக் களஞ்சியம் மற்றும் இராணுவ நிலைகள் மீது இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதல்களால் குறைந்தது ஐந்து வீரர்களும் 11 நட்பு போராளிகளும் உயிரிழந்தனர் என்று சிரிய மனித உரிமைகளுக்கான ஆய்வகம் நேற்று தெரிவித்தது.

இஸ்ரேலிய விமான படை சிரியாவின் கிழக்கு நகரமான டெய்ர் அஸ் சோர் முதல் சிரிய - ஈராக் எல்லையில் உள்ள அல் புகாமால் பாலைவனம் வரை பல இடங்களில் 18 க்கும் மேற்பட்ட தாக்குதல்களை நடத்தியது.

இந்த தாக்குதல்களில் ஈரானிய புரட்சிகர காவலர்கள், லெபனான் ஹிஸ்புல்லா மற்றும் ஈரானிய சார்பு ஆப்கானிய போராளிகள் அடங்கிய பேட்மியோன் பிரிவுக்கு சொந்தமான ஐந்து சிரிய வீரர்கள் மற்றும் 11 நட்பு போராளிகள் கொல்லப்பட்டனர் என்று ஆய்வகம் தெரிவித்துள்ளது.

சிரிய நேரப்படி புதன் கிழமை அதிகாலை 1:10 மணிக்கு இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ஈரானிய சார்பு போராளிகளுக்கு சொந்தமான பல ஆயுதக் கிடங்குகள் மற்றும் தளங்கள் இப்பகுதியில் பாதிக்கப்பட்டுள்ளன என்று சிரிய ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இந்த தாக்குதல் குறித்து இஸ்ரேல் எந்த கருத்தும் தெரிவிக்காத நிலையில் கடந்த ஒரு வாரத்திற்குள் சிரியாவில் இஸ்ரேல் மேற்கொண்ட இரண்டாவது தாக்குதல் இதுவாகும். (ஐ)

# ரஷ்யாவில் மாடி குடியிருப்பில் தீ குழந்தை உட்பட எண்மர் பலி!

மொஸ்கோ, ஜன. 14

ரஷ்யாவின் கிழக்கு பகுதியான யூரல் பிராந்தியத்தில் யெகாடெரின்பக் நகரில் 9 மாடிகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு கட்டடத்தில் தீ ஏற்பட்டதில் ஒரு குழந்தை உட்பட 8 பேர் உடல் கருகி உயிரிழந்தனர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை இந்த அடுக்குமாடி குடியிருப்பின் 2ஆவது தளத்தில் திடீரென தீ பிடித்தது. மளமளவென கொழுந்துவிட்டு எரிந்த தீ கண்ணிமைக்கும் நேரத்தில் அடுத்தடுத்த தளங்களுக்கு பரவியது.

அதிகாலை நேரம் என்பதால் மக்கள் அனைவரும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தனர்.

வீடுகளில் தீ பரவுவதை அறிந்து திடுக்கிட்டு எழுந்தவர்கள் அங்கிருந்து அலறியடித்தபடி ஓட்டம் பிடித்தனர்.

எனினும், சில வீடுகளில் தீ நாலாபுறமும் சூழ்ந்து கொண்டதால் அங்கிருந்தவர்கள் வெளியேற முடியாமல் உள்ளே சிக்கிக் கொண்டனர்.

தகவல் அறிந்து அங்குவந்த தீயணைப்பு வீரர்கள் தீயை அணைத்தனர். அவர்கள் சுமார் 90 பேரை பத்திரமாக மீட்டனர்.

எனினும் இந்த விபத்தில் தீயின் கோரப்பிடியில் சிக்கி ஒரு பச்சிளம் குழந்தை உட்பட 8 பேர் உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும், பலருக்கு இலேசான தீக்காயங்கள் ஏற்பட்டன. தீ விபத்துக்கான காரணம் குறித்து அறிய விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. (ஐ)

# ட்ரம்பின் கருத்துக்களை யூ-ரியூப்பும் நீக்கியது



வாஷிங்டன், ஜன. 14

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வெளியிட்ட சர்ச்சைக்குரிய கருத்துகளை யூ-ரியூப் நிறுவனம் நீக்கியுள்ளது. வன்முறையை தூண்டும் வகையிலும், விதிகளுக்கு புறம்பாக இருந்ததாகவும் கூறி அவற்றை யூ-ரியூப் நிறுவனம் நீக்கியுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற ஜோ பைடனுக்கு வெற்றி பெற்றதற்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் பாராளுமன்றத்தில் முன்பு குவிந்த ட்ரம்ப் ஆதரவாளர்கள் கலவரத்தில் ஈடுபட்டனர்.

அமெரிக்க ஜனாதிபதி பதவியிலிருந்து விடுபட இருக்கும் ட்ரம்ப் வெளியிட்ட ருவிட்டர் பதிவே கலவரத்திற்கு காரணம் என்று கூறப்பட்டது. இதனையடுத்து அவரது ருவிட்டர் பக்கம் நிரந்தரமாக முடக்கப்பட்டது.

அந்தவகையில் ருவிட்டர், பேஸ்புக், இன்ஸ்டாகிராமைத் தொடர்ந்து தற்போது யூ- ரியூப் நிறுவனமும் ட்ரம்பிற்கு எதிராக நடவடிக்கை எடுத்துள்ளது.




# அன்ரனியோ குட்டெரஸ் ஐ.நா. பொதுச் செயலர் பதவிக்கு மீள போட்டி

நியூயோர்க், ஜன. 14

ஐ.நா. சபையின் பொதுச் செயலர் பதவிக்கு மீண்டும் போட்டியிட அன்ரனியோ குட்டெரெஸ் முடிவு செய்துள்ளார்.

இது தொடர்பில் அவரின் செய்தித் தொடர்பாளர் ஸ்ரெபனி துஜாரிக் கூறுகையில்,

"ஐ.நா. தலைமைப் பொறுப்புக்கு மீண்டும் போட்டியிடுவதற்கான விருப்பத்தை பொதுச் செயலாளர் அன்ரனியோ குட்டெரெஸிடம் ஐ.நா வின் பொதுச் சபை தலைவர் வோல்கன் போஸ்கிர் கேட்டார்.

இதற்கு, பொதுச் செயலர், மேலும் 5 ஆண்டுகளுக்கு பொறுப்பை வகிக்கும் விருப்பைத் தெரிவித்தார். இது தொடர்பில் பாதுகாப்பு சபையின் தலைவருக்கும் குட்டெரெஸ் கடிதம் எழுதியுள்ளார்" - என்றார்.

அன்ரனியோ குட்டெரெஸ் கடந்த 2017 ஜனவரி 1 முதல் ஐ.நா. பொதுச் செயலராக பதவி வகிக்கிறார். இவரின் பதவிக் காலம் வரும் டிசெம்பர் 31ஆம் திகதியுடன் நிறைவுக்கு வருகின்றது. (ஐ)

# கியூபா பயங்கரவாத ஆதரவு நாடு; அறிவித்தது அமெரிக்கா

வாஷிங்டன், ஜன. 14

கியூபாவை பயங்கரவாத ஆதரவு நாடாக அமெரிக்கா மீண்டும் அறிவித்துள்ளது.

கியூபாவில் கடந்த 1959ஆம் ஆண்டு புரட்சி மூலம் பிடல் காஸ்ட்ரோ ஆட்சியைப் பிடித்தார். அதைத் தொடர்ந்து 1960இல் அமெரிக்கா, கியூபா இடையிலான தூதரக உறவு முறிந்தது.

இதைத் தொடர்ந்து கியூபாவை பயங்கரவாதத்துக்கு ஆதரவளிக்கும் நாடாக அறிவித்த அமெரிக்கா அந்த நாட்டின் மீது பொருளாதார தடைகளையும் விதித்தது.

தவிர, அந்த நாட்டுடன் வர்த்தகத்தில் ஈடுபட்டோருக்கு அபராதம் விதித்தும் வந்தது. அதேசமயம், கியூபாவுக்கான வெளிநாட்டு உதவிகளையும் அமெரிக்கா கட்டுப்படுத்தியது. ஆயுதங்கள் ஏற்றுமதி மற்றும் விற்பனைக்கும் தடை விதிக்கப்பட்டது.

இப்படி, இரு நாடுகளுக்கும் இடையில் அரை நூற்றாண்டுக்கும் மேலாக மோதல் போக்கு நீடித்து வந்த நிலையில், ஜனாதிபதி ஒபாமாவின் ஆட்சிக்காலத்தில் இரு நாடுகளுக்கும் இடையே நட்பு மலர்ந்தது. இதைத் தொடர்ந்து பயங்கரவாதத்துக்கு ஆதரவு அளிக்கும் நாடுகளின் பட்டியலில் இருந்து கியூபாவை அமெரிக்கா நீக்கியது.

இந்த நிலையில் தற்போதைய ஜனாதிபதி ட்ரம்ப் தலைமையிலான நிர்வாகம் கியூபாவை பயங்கரவாதத்துக்கு ஆதரவளிக்கும் நாடாக மீண்டும் அறிவித்துள்ளது. இது தொடர்பான அறிவிப்பை அமெரிக்க வெளியுறவு மந்திரி பாம்பியோ நேற்றுமுன்தினம் வெளியிட்டார்.

ஜனாதிபதி ட்ரம்பின் பதவி காலம் முடிய இன்னும் சில தினங்களே இருக்கும் நிலை யில் அவர் கியூபாவுக்கு எதிரான இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

தங்களை மீண்டும் பயங்கரவாத ஆதரவாளராக அறிவித்ததற்கு அமெரிக்காவுக்கு கியூபா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. (ஐ)

# இலங்கை அணியில் 22 வீரர்கள்: மத்தியூஸின் பெயரும் அறிவிப்பு



கொழும்பு, ஜன. 1

இங்கிலாந்துக்கு எதிராக இன்று ஆரம்பமாகும் டெஸ்ட் தொடரில் விளையாட 22 பேர் கொண்ட இலங்கை அணியை இலங்கை கிரிக்கெட் சபை நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

இதில், இலங்கை அணியின் சகலதுறை ஆட்டக்காரரான அஞ்சலோ மத்தியூஸ் இடம் பிடித்துள்ளார். தொடை எலும்பு காயம் காரணமாக தென்னாபிரிக்காவுக்கு எதிரான இலங்கையின் கடைசி டெஸ்ட் தொடரை தவறவிட்ட மத்தியூஸ், நுவான் பிரதீப், ரூஷென் சில்வா மற்றும் லக்ஷன் சந்தகன் ஆகியோருடன் மீண்டும் அணிக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

திமுத் கருணாரத்ன தலைமையிலான இந்த அணியில் ரமேஷ் மெண்டிஸூம் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

இதேநேரம் தனஞ்சய டி சில்வா, கசுன் ராஜிதா, சந்தூஷ் குணத்திலகமற்றும் தில்ஷன் மதுஷங்க ஆகியோர் அணியில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

அணி விவரம்: திமுத் கருணாரத்ன (கப்டன்), குஷல் பெரேரா, தினேஷ் சந்திமால், குஷல் மெண்டிஸ், அஞ்சலோ மத்தியூஸ், ஒஸத பெர்னாண்டோ, நிரோசன் திக்வெல்ல, மினோட் பானுக, லஹிரு திரிமன்னே, லசித் எம்புலுதெனிய, வனிந்து ஹசரங்க, டில்ருவான் பெரேரா, சுரங்க லக்மால், லஹிரு குமார, விஸ்வ பெர்னாண்டோ, துஷ்மந்த சாமீர, தசூன் சானக, அசித பெர்னாண்டோ, றொசேன் சில்வா, லக்ஷன் சந்தகன், நுவன் பிரதீப், ரமேஷ் மெண்டிஸ்.

# சாய்னாவுக்கு தொற்றில்லை



பாங்கொக், ஜன. 14

இந்திய பட்மின்ரன் வீராங்கனை சாய்னா நெவால், பட்மின்ரன் வீரர் எச்.எஸ்.பிரணாய் ஆகியோருக்குகொரோனா தொற்று இல்லை என்பது உறுதி செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து அவர்கள் இருவரும் தாய்லாந்து ஓப்பனில் விளையாட அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

முன்னதாக சாய்னாவுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவர் தாய்லாந்து ஓப்பனில் இருந்து விலகினார் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அதேநேரத்தில் இந்திய வீரர் எச்.எஸ்.பிரணாய்க்கு முதலில் கொரோனா தொற்று இருக்கிறது என்றும் பின்னர் இல்லை எனவும் அறிவிக்கப்பட்டது. இதனால் அவரும் தாய்லாந்து ஓப்பனில் விளையாடுவதில் சந்தேகம் நிலவியது.

இந்த நிலையில், சாய்னா, எச்.எஸ்.பிரணாய் ஆகியோருக்கு 4-ஆவது முறையாக கொரோனா பரிசோதனை செய்யப்பட்டதில் தொற்று இல்லை என்பது உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து அவர்கள் இருவரும் தாய்லாந்து ஓப்பனில் களமிறங்குவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

(ஐ)



# இலங்கை - இங்கிலாந்து டெஸ்ட் இன்று ஆரம்பம்

கொழும்பு, ஜன. 14

தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடர் முடிவடைந்து சரியாக ஏழு நாட்களுக்குப் பின்னர் இலங்கைக்கு எதிராக மற்றொரு சவாலான போட்டி இன்று ஆரம்பமாகிறது.

இதன்படி ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன்ஷிப்பின் கீழ் இலங்கை அணி இன்றைய தினம் இங்கிலாந்து அணிக்கு எதிராக இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டியை சந்திக்கவுள்ளது.

இந்திப் போட்டியில் இலங்கை அணியானது ஆடுகளம் நுழைவதற்கு சற்று தயக்கம் காட்டுகின்றது என்று கூறினால் கூட அது மிகையாகாது.

காரணம் தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடர், தோல்வி மற்றும் உபாதை காரணமாக ஏழு முக்கிய வீரர்களின் இழப்பு என்பன இலங்கை அணியை இத்தருணத்தில் நெருக்கடிக்கு தள்ளியுள்ளது.

எனினும், இலங்கை அணியின் விக்கெட் காப்பாளரான நிரோஷன் திக்வெல்ல, போட்டிகளில் தங்கள் தவறுகளை சரிசெய்து ஒரு நல்ல தொடக்கத்தை மேற்கொண்டால், தனது அணிக்கு போட்டியை வெல்ல சிறந்த வாய்ப்பு உள்ளது என்று கூறியும் உள்ளார்.

தென்னாபிரிக்க அணியுடனான தொடரிலும் இலங்கை அணி வீரர்கள் இதே மனநிலையுடன் ஆடுகளம் நுழைந்தனர். எனினும், முன்னணி வீரர்களின் இழப்பு மற்றும் சூழ்நிலைகள் என்பன இலங்கையின் நம்பிக்கையை வேரோடு சாய்த்தது.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டு டெஸ்ட் போட்டிகளும் மூன்று நாட்களிலேயே முடிவடைந்தன, இலங்கை நான்கு இனிங்ஸ்களில் ஒன்றில் மட்டுமே 60 ஓவர்களுக்கு மேல் விளையாடியது. முதல் போட்டியின் முதல் இனிங்ஸில் 96 ஓவர்களில் 396 ஓட்டங்களை எடுத்தது. மற்ற மூன்று இன்னிங்ஸ்களில் (46.1 ஓவர்கள், முதல் இன்னிங்ஸில் 40.3 ஓவர்கள் மற்றும் இரண்டாவது இன்னிங்ஸில் 56.5 ஓவர்கள்) 143.3 ஓவர்களுக்காக வெளியேற்றப்பட்டது.

இது இவ்வாறிருக்க முதல் டெஸ்ட் போட்டியில் பங்கேற்க அம்பாந்தோட்டா விலிருந்து காலிக்கு சென்றுள்ள இங்கிலாந்து அணியானது நேற்று முன்தினம் காலியில் தனது முதல் பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொண்டது.

ஒரு வாரமாக சுய தனிமைப் படுத்தப்பட்டிருந்த கிறிஸ் வோக்ஸ், இதன்போது பயிற்சிக்கு திரும்பினார்.

கடந்த 8 ஆம் திகதி மாலை தென்னாபிரிக்காவிலிருந்து காலிக்கு வந்த இலங்கை அணி 10 ஆம் திகதி ஒரு பயிற்சி அமர்வை நடத்த திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், அன்று முழுவதும் பெய்த பலத்த மழைக் காரணமாக பயிற்சியில் பங்கேற்கும் வாய்ப்பு அற்றுப் போனது.

இருப்பினும், இலங்கை அணி தனது பயிற்சி நடவடிக்கைகளில் கடந்த திங்கட்கிழமை காலி சர்வதேச மைதானத்தில் மேற்கொண்டது.

இங்கிலாந்து அணியின் வலிமை மிக்க வீரர்களான பென் ஸ்டோக்ஸ், ஜோப்ரே ஆர்ச்சர், ரோரி பேர்ன்ஸ் ஆகியோரும் இத்தொடரில் உள்வாங்கப்படவில்லை. அதே நேரம் 2018 ஆம் இலங்கையுடனான டெஸ்ட் தொடரில் இங்கிலாந்தை 3-0 என்ற தொடர் வெற்றிக்கு அழைத்துச் சென்ற முக்கிய வீரர்களான அடில் ரஷித் மற்றும் மொய்ன் அலி ஆகியோரும் கொவிட் 19 ஆகியோர் வைரஸ் தொற்று காரணமாக அணியில் இருந்து விலக்கப்பட்டுள்ளனர்.

இந் நிலையில் 2018 ஆம் ஆண்டு இலங்கை அணி அடைந்த தோல்விக்கு இத் தொடரின் மூலம் பதிலடி கொடுப்பதற்கான வாய்ப்புகள் தமக்கு உள்ளதாக இலங்கை அணி வீரர் நிரோஷன் டிக்வெல்ல குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான முதல் டெஸ்ட் போட்டியானது இன்று காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் காலை 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அபுதாபி ரென்னிஸ்: இறுதியில் சபலென்கா




அபுதாபி, ஜன. 14

அபுதாபி சர்வதேச ரென்னிஸ் தொடரின் இறுதியாட்டத்துக்கு சபலென்கா முன்னேறியுள்ளார்.

பெண்களுக்கான டபிள்யூ. டி.ஏ. ரென்னிஸ் தொடர் அபுதாபியில் நடக்கிறது.

இதன் ஒற்றையர் பிரிவு அரையிறுதி யில் பெலாரஸின் அரினா சபலென்கா, கிறீஸின் மரியா சக்கரி மோதினர். முதல் செற்றை 6:3 எனக் கைப்பற்றிய சபலென்கா, இரண்டாவது செற்றை 6:2 என வென்றார். முடிவில் சபலென்கா 6:3, 6:2 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதிக்குள் நுழைந்தார்.

இதன்மூலம் டபிள்யூ.ரி.ஏ., அரங்கில் தொடர்ச்சியாக 14ஆவது வெற்றியை பதிவு செய்தார் சபலென்கா. கடந்த ஆண்டு செக்குடியரசு (4 போட்டி), ஆஸ்திரியாவில் (5 போட்டி) நடந்த தொடர்களில் கிண்ணம் வென்ற இவர், அபுதாபி ஓப்பனில் 5 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளார்.

தவிர இவர், இந்தத் தொடரில் கோப்பை வென் றால் டபிள்யூ.ரி.ஏ., ஒற்றையர் தரவரிசையில் 7ஆவது இடத்துக்கு முன்னேறலாம்.

மற்றோர் அரையிறுதியில் ரஷ்யாவின் வெரோனிகா குடர்மெட் டோவா, உக்ரைனின் மார்டா கோஸ்ட்யுக் மோதினர். இதில் வெரோனிகா 7:6, 6:4 என வென்றார்.

(ஐ)



# வவுனியா பாவற்குளத்தின் 3 வான்கதவுகள் திறப்பு!

*வவுனியா,ஜன.14*

*வவுனியா பாவற்குளத்தின் வான் கதவுகள் கடும் மழையால் மத்திய நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியலாளர்களால் திறந்து வைக்கப்பட்டன.*

*வவுனியா மாவட்டத்தில் மத்திய நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் பராமரிக்கப்பட்டு வரும் பாவற்குளம், ஈரப்பெரியகுளம், முகத்தான்குளம், மருதமடுக்குளம், ராஜேந்திரன்குளம் மற்றும் கல்லாறு அணைக்கட்டு என்பன வவுனியாவில் தொடர்ந்து பெய்துவரும் கடும்மழையால் வான் பாய்ந்த நிலையில் வவுனியா மாவட்டத்தின் பெரிய குளமாகிய பாவற்குளத்தின் நீர் மட்டம் அதிகரித்துள்ளது.*

*இதனால் மத்திய நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியலாளர்களாகிய எந்திரி குமாரசாமி, கெ.இமாசலன் மற்றும் பிரிவு உதவியாளர் க.கஜமுகதாஸ் ஆகியோரின் தலைமையில் குளத்தின் மூன்று வான் கதவுகளும் ஒரு அடி திறக்கப்பட்டன.* (எ)

# யாழில் கடும் மழையால் 358 குடும்பங்கள் பாதிப்பு

*யாழ்ப்பாணம்,ஜன.14*

*யாழ். மாவட்டத்தில் நிலவும் மழையுடன் கூடிய காலநிலையால் 358 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 47 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.*

*அத்தோடு நேற்று முன்தினம் காலையிலிருந்து யாழ். குடாநாட்டில் பெய்த கடும் மழையால் 57 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.*

*மழையால் ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பான விவரங்கள் சேகரிக்கப்பட்டு அனர்த்த முகாமைத்துவப் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து மழையுடன் கூடிய காலநிலை நீடிப்பதனால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம்- என்றார்.* (எ)

# போலி ஆவணங்கள் மூலம் வாகனங்கள் பெற்று மோசடி

## *மூவர் கைது: 17 வாகனங்கள் மீட்பு*



**கொழும்பு,ஜன.14**

**வாடகை அடிப்படையில் வாகனங்களை விநியாகம் செய்துவரும் நிறுவனங்களில் போலி ஆவணங்களை காண்பித்து வாகனங்களை பெற்றுக் கொண்டு, அவற்றின் இலக்கத்தகடு மற்றும் இயந்திர இலக்கத்தை மாற்றி மூன்றாம் தரப்பினருக்கு விற்பனை செய்ததாகவும், அவர்களுக்கு உதவி ஒத்தாசைகளை வழங்கியதாகவும் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.**

*கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில்இதுதொடர்பில்அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:*

*வாடகை அடிப்படையில்வாகனங்களை விநியோகம் செய்துவரும் நிறுவனங்களில் போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து வாகனங்களைப் பெற்றுக் கொண்டு, அவற்றின் இலக்கத்தகடு மற்றும் இயந்திர இலங்கங்களை மாற்றி அமைத்து, அதனை விற்பனை செய்வதற்கு அவசியமான போலி ஆவணங்களையும் தயாரித்து மூன்றாம் தரப்பினருக்கு விற்பனை செய்தமை தொடர்பில் முல்லேரியா பொலிஸார்இருவரைக்கைது செய்துள்ளனர்.*

*முல்லேரியா பொலிஸ் நிலையத்துக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மிகவும் சூட்சுமமான முறையில் போலிதேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் மின் கட்டணப் பற்றுச்சீட்டு என்பவற்றை காண்பித்தே இவ்வாறு வாகனங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்டுள்ளனர் என விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.*

*சந்தேக நபர்களால் இவ்வாறு பெற்றுக்கொள்ளப்படும் வாகனங்களை உதிரிப்பாகங்களாகவோ அல்லது அவற்றின் இலக்கத்தகடு மற்றும் இயந்திர இலக்கங்களை மாற்றியோ விற்பனை செய்துள்ளனர். சந்தேக நபர்களால் எடுத்துச்செல்லப்பட்ட வாகனங்களுக்கான கட்டணங்கள் கிடைக்கப் பெறாததால் உரிய நிறுவனத்தினர் அவர்களால் தெரிவிக்கப்பட்ட முகவரிகளுக்குச் சென்று விசாரணை செய்த பின்னரே அவர்களது மோசடி தொடர்பில் தெரியவந்துள்ளது.*

*யக்கல மற்றும் மீரியகமை ஆகிய பகுதியைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து 16 கார்களும், வான் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது. சந்தேக நபர்களுக்கு போலி ஆவணங்களைத் தயாரித்துக் கொடுத்தமை தொடர்பில் கம்பஹா - மகலெகொடை பகுதியைச் சேர்ந்த மற்றுமொரு சந்தேக நபரும் கைது செய்யப்பட்டுள்ளார். இதன்போது சந்தேக நபர்கள் சீதுவை, கம்பஹா, கொச்சிக்கடை மற்றும் முல்லேரியா ஆகிய பகுதிகளில் உள்ளவர்களுக்கே வாகனங்களை விற்பனை செய்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.*

*இந்நிலையில் இவ்வாறு வாடகை அடிப்படையில் வாகனங்களை விநியோகம் செய்துவரும் நிறுவனமொன்றுக்கு வாகனங்களை கொடுத்து அது காணாமல் போயுள்ள வாகன உரிமையாளர்கள், முல்லேரியா பொலிஸ் நிலையத்துக்குச் சென்று தங்களது வாகனம்அங்கு இருக்கின்றதா என்பது தொடர்பில் உறுதிப் படுத்திக் கொள்ள முடியும்.*

*இதேவேளை இதுபோன்ற நிறுவனங்கள்தங்களிடம்வாகனங்களைப் பெற்றுக்கொள்ளும் நபர்கள் தொடர்பில் மேலும் கவனத்துடன் இருக்கவேண்டும். அவர்களிடம் பெற்றுக்கொள்ளும் ஆவணங்களுடன், அவர்களின் புகைப்படங்களையும் பெற்றுக் கொள்வது சிறந்ததாகும். இவ்வாறான நிலைமைகளின் போது உரியநபர்களைஅடையாளம்காண்பதற்கு இலகுவாக இருக்கும். இந்நிலையில் இந்த மோசடி தொடர்பில் முல்லேரியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்- என்றார்.* (எ)

# நான் கூறியவை கசப்பான உண்மைகள் ஒருபோதும் அவற்றை மீளப்பெறமாட்டேன்

## *ரஞ்சன் ராமநாயக்க உறுதி*



*கொழும்பு,ஜன.14*

*களவெடுத்ததாலோ அல்லது போதைப் பொருள்கள் விற்பனை செய்ததாலோ நான் சிறைக்குச் செல்லவில்லை. கசப்பான உண்மைகளை வெளிப்படுத்தியதால் தான் சிறையில் அடைக்கப்பட்டுள்ளேன் என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார்.*

*ரஞ்சன் ராமநாயக்க, நீதிமன்றத்தை அவமதித்தார் என்று குற்றம்சாட்டி 4 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்து நேற்று முன்தினம் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. பின்னர், நீதிமன்றிலிருந்து சிறைச்சாலை பேருந்துக்கு கொண்டு செல்லும்போது, ஊடகவியலாளர்கள் மற்றும் அங்கிருந்த ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள், ஆதரவாளர்களை நோக்கி அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.*

*அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:*

*அனைவருக்கும் வெற்றி உண்டாகட்டும். கசப்பான உண்மைகளையே நான்பேசினேன். களவெடுக்கவில்லை. பிள்ளையானை இந்த அரசாங்கம் வெளியே விட்டது. என்னை உள்ளே தள்ளுகின்றனர். நான் போதைப்பொருள்களை விற்கவில்லை”*

*இதன்போது அங்கிருந்த ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார, ரஞ்சன், நாங்கள் உங்களுடன் இருக்கின்றோம். பயப்பட வேண்டாம். எரான் விக்கிரமரட்னவும் இங்கு இருக்கின்றார் எனத் தெரிவித்தார். அப்போது அவர்களை நோக்கி ரஞ்சன் ராமநாயக்க:*

*‘ஊழல் அரசாங்கத்தை விரட்டியடிக்கும் போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லுங்கள்”*

*‘நான் கூறிய எதனையும் மீளப்பெறப் போவதில்லை. அவர்கள் உண்மையிலேயே கள்வர்கள். கள்வர்கள் தொடர்பில் வெளிப்படுத்தியமைக்காக என்னை சிறையிலடைக்கின்றனர். நான் எதனையும் மீளப்பெறப்போவதும் இல்லை. மன்னிப்பு கேட்கப்போவதுமில்லை. ஐந்து சதமேனும் நான் களவாடவில்லை. எனக்குக் கிடைத்த பணம், எனது சம்பளம், கொடுப்பனவுகளை நான் மக்களுக்கே பகிர்ந்தேன். அரிசி வழங்கினேன். மக்களுக்கு அரிசி வழங்கச் சென்றதால் 4 மில்லியன் ரூபா கிடைத்தது. அதில் இரண்டு மில்லியன் ரூபாவையே பகிர முடிந்தது. 2 மில்லியன் மீதமுள்ளது.*

*பணத்தை பகிரும் போது என்னை சிறையிலடைத்துள்ளனர். பயப்பட வேண்டாம் இது 4 வருடங்கள் மட்டுமே. மீண்டும் வருவேன்.*

*நாம் களவெடுத்து, போதைப்பொருள் கடத்தி சிறைக்குச் செல்லவில்லை. நான் அரசாங்கத்திடம் கூறுகின்றேன். பிள்ளையானை விடுவித்தது போன்று துமிந்த சில்வாவையும் வெளியே விடுங்கள். போதைப்பொருள் கடத்தல்காரர்கள் தொடர்பில் கூறியதாலேயே என்னைச் சிறையிலடைக்கின்றனர். எனக்குப் பயமில்லை. நான் தனித்தவன்.*

*கொன்றாலும் பயப்படமாட்டேன். எப்போதும் கசப்பான உண்மைகளைப் பேசுவேன். மன்னிப்புக் கேட்கப்போவது மில்லை.*

*போதைப்பொருள் விற்கவில்லை. களவெடுக்கவில்லை. எதனோல் கடத்தவில்லை. அவற்றை செய்தவர்கள் தொடர்பில் கூறியதால் என்னை சிறையிலடைக்கின்றனர்- எனத் தெரிவித்தார்.*

*இதன்போது ஊடகவியலாளர் ஒருவர், ‘ரஞ்சன் அண்ணா, இப்போது உங்களுக்குப் பயமாக இருக்கின்றதா?” எனக் கேட்டார். அதற்கு சிறைச்சாலை பேருந்து படிகளில் தொங்கிய வண்ணம் ரஞ்சன் ராமநாயக்க: ‘பைத்தியமா தம்பி. பயம் என்பது சிறிதளவேனும் இல்லை” எனப் பதிலளித்தவாறு மீண்டும் அனைவருக்கும் வெற்றி உண்டாகட்டும் எனக் கூறினார்.*

*இதனையடுத்து அவர் சிறைச்சாலை பஸ்ஸில் அழைத்துச் செல்லப்பட்டார்.*

*எவ்வாறாயினும் தற்போதைய கொரோனா தொற்று அச்ச நிலையால் தண்டனைக் கைதியான ரஞ்சன் ராமநாயக்க நீர்கொழும்பு - பல்லன்சேன சிறைக் கைதிகள் புனர்வாழ்வு மையத்தில் உள்ள தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு முதலில் அழைத்து செல்லப்பட்டுள்ளார் என சிறைச்சாலைகள் திணைக்களத்தின் பேச்சாளர், சிறைச்சாலைகள் ஆணையாளர் ( நிர்வாகம்) சந்தன ஏக்கநாயக்க கூறினார். தனிமைப்படுத்தல் காலம் நிறைவடைந்ததும் அவர் சிறைக்கு மாற்றப்படுவார் என அவர் சுட்டிக்காட்டினார்.* (எ)

# வடக்கு - கிழக்கில் தொல்பொருள் பகுதிகளில் சட்டவிரோத குடியேற்றம்

## இராஜாங்க அமைச்சர் விதுர



கொழும்பு, ஜன. 14

**வடக்கு - கிழக்கில் மாத்திரமல்ல முழு நாட்டிலும் தொல்பொருள் சிறப்பு வாய்ந்த இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்த இடங்களில் சட்டவிரோத குடியிருப்புக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றை அகற்றும்போது தேவையற்ற பிரச்னைகள் தோற்றம் பெறும். - இவ்வாறு தேசிய மரபுரிமைகள், கிராமிய கலை கலாசார மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.**

மேலும், தொல்பொருள் மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்கு விசேட பாதுகாப்பு பொறிமுறை செயல்படுத்தப்படும். இதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறியுள்ளார். கொழும்பில் நேற்று இடம் பெற்ற நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு, அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இலங்கையின் பாரம்பரிய தொல்பொருள் மரபுரிமைகள் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்துள்ளன. மன்னர் காலத்தில் உருவாக்கப்பட்ட சிற்பங்கள், கலை கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் கலாசார அம்சங்கள் அனைத்தும் ஒரு தலைமுறையின் வாழ்க்கை மற்றும் கலாசாரத்தை இன்று எமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

பல்லாயிரக்கணக்கான வருடங்களைக் கொண்ட வரலாற்று சிறப்பு மிக்க தொல்பொருள்களை பாதுகாப்பது அரசாங்கத்தின் மாத்திரமல்ல நாட்டு மக்களினதும் பொறுப்பாகும். தொல்பொருள் மரபுரிமைச் சின்னங்கள், வரலாற்று சிறப்பு மிக்க இடங்கள் திட்டமிடப்பட்ட வகையில் அழிக்கப்படுகின்றன.

மக்கள் மத்தியில் அரசியல் கருத்துக்கள், நோக்கங்கள் வேறுபட்டதாக இருக்கலாம். ஆனால், நாடு என்ற ரீதியில் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். தொல்பொருள் சிறப்புமிக்க இடங்கள் நாட்டின் வரலாற்று அடையாளம். அவற்றைப் பாதுகாப்பது அனைத்து இன மக்களினதும் பொறுப்பாகும் - என்றார். (எ)

# தமிழர்களே எழுந்து நின்று புத்தாண்டை கொண்டாடுங்கள்

## மாவை சேனாதிராசா வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணம், ஜன. 14

தமிழ் உலகம் போராட்டக் களத்தில் நிற்கிறது. வளம் தரும் மழையும் கொட்டி நிற்கின்றது. வானம் தெரியுமோ? ஆதவன் உதிப்பது தெரியுமோ, தமிழர் தேசமும் வெள்ளக்காடானது எனவும் ஏக்கம்? தமிழர் உலகம் ஒன்றுபட்டுத் தமிழர் விடுதலைக்கும் விடிவுக்கும் செயலாற்றுகிறது. தை பிறந்தால் வழிபிறக்கும் எனும் புத்தாண் டில் புதிய நம்பிக்கையும் பிறக்கிறது. தமிழர்களே எழுந்து நின்று தமிழ்ப் புத்தாண்டை தைப்பொங்கலைக் கொண்டாடுங்கள்.

இவ்வாறு இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சோ. சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

தனது தைப்பொங்கல் திருநாள் வாழ்த்து செய்தியிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அந்த வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:

“தை பிறந்தால் வழி பிறக்கும்” எனும் ஆன்றோர் அருள்வாக்கு. தமிழர் பண்பாட்டு விழா உலகெங்கும் கொண்டாடப்படும் நாகரிகம் கொண்ட பாரம்பரியம். புத்தாண்டின் தொடக்க விழா தைத்திருநாள் தைப்பொங்கலுடன் ஆரம்பிக்கின்றது. தைப்பொங்கல் பண்டிகை உழைத்து வாழும் வேளாண் மக்கள் உலகெங்கும் தமிழர் விழாவாகக் கொண்டாடுவர். நன்றிக்கு விழா வெடுத்துப் பகலவனுக்கு நன்றி செலுத்தும் பண்டைய நாகரிகம் போற்றும் தமிழர் திருநாள். தமிழ் செம்மொழியாய் பெருமை பெறும் பண்பாட்டு விழாவை கொண்டாடுவோம்.

“வரப்புயர” என்று ஒரு புலமைக் கருத்துண்டு மழை நீர் கொட்ட, வயல் நிலத்தில் வரம்பு கட்டி நீர் உயரும், உழுது பண்பட்ட நிலத்தில் நெல் உயரும், நீர் உயரக் குடியுயரும், குடி உயரக் கோன் உயரும் என்று வளரும் விளைச்சல் அறுவடை செய்து மக்கள் வாழும் தம்மையாளும் சுதந்திரக் காற் றைச் சுவாசித்துக் குடிமக்கள் வாழும் பண்டிகை தைப்பொங் கலாகும்.

2021இலும் தை பிறக்க இயேசு கிறிஸ்து பிறந்த நத்தார் கொண்டாட்டத்துடன் தை பிறக்கப் புத்தாண்டு கொண்டாடி வரும்வேளை, இயற்கை இறை போற்றும் தமிழர் பொங்கல் பண்டிகையும் தைத்திங்களில் வருகின்றமை தமிழ் மக்களுக்கும், உலகுக்கும் பேருவகை தருகிறது.

இலங்கையில் தமிழர் தேசத்தில் தமிழ் மக்கள் விடுதலை வேண்டி நடத்தும் போராட்டம், ஆயிரமாயிரமாய் அந்த விடுதலைக்காக இன்னுயிரையும் அர்ப்பணித்துத் தியாகம் செய்து வரும் வீரமறவர் தமிழர் தை பிறந்தால் நம்மை நாம் ஆள வழி பிறக்கும் என்று எழுந்து போற்றும் தமிழர் திருநாள் பொங்கலைப் போற்றுவோம். புத்தரிசி எடுத்துப் பொங்கி வாழும் மக்கள் இதயம் பொங்கிட அனைவரையும் வாழ்த்துவோம், வாழ்க- என்றுள்ளது. (ஐ)



# இயற்கை வழி அங்காடி கோண்டாவிலில் திறப்பு

யாழ்ப்பாணம், ஜன. 14

இயற்கை வழி இயக்கத்தின் இயற்கை வழி அங்காடி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை பலாலி வீதி, கோண்டாவிலில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இந்த இயற்கை வழி அங்காடியை செயல்பாட்டாளர்கள் இணைந்து திறந்து வைத்தனர்.

இயற்கைவழி வேளாண்மைக்கு தேவையான கரைசல்கள், இயற்கை உரங்கள், பாரம்பரிய விதைகள், கன்றுகள் முதல்கொண்டு நஞ்சற்ற வேளாண் உற்பத்திகள் வரை சகலவற்றையும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.

நேற்றைய தினம் இடம்பெற்ற இயற்கைவழி அங்காடிஆரம்ப நிகழ்வும் இணையவழிக் கலந்தாய்வும் நிகழ்வில் 2018 ஆம் ஆண்டில் இயற்கைவழி இயக்கத்தின் தோற்றத்துக்குக் காரணமாக இருந்த தொடர் கருத்தரங்குகளை முன்னின்று நடாத்திய பேராசிரியர். சிறீஸ்கந்தராஜா, அனந்தராஜ் நவஜீவன் (புதிய வெளிச்சம்), தமிழகத்தைச் சேர்ந்த வேளாண் அறிஞர் பாமயன் சுந்தர்ராமன் ஐயாவுடன் மண்புழு ரவி, கஜேந்திரன், கோணேஸ் போன்றோரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வின் மூலம் பல்வேறு அனுபவ பகிர்வுகளை இயற்கை விவசாயிகள் பெற்றுக் கொண்டனர். (ஐ)

# எமக்கான விடியல் தூரமில்லை

## இந்து குருமார் ஒன்றியம் வாழ்த்து

யாழ்ப்பாணம், ஜன. 14

இனி நல்வழிபிறக்கும் என்ற நம்புக்கையுடன் இந்த பொங்கலை வீட்டில் தனித்திருந்து கொண்டாடுவோம், வீட்டில் இருந்து இறைவனை வழிபடுவோம். எமக்கான விடியல் தூரத்தில் இல்லை என்று இந்துக் குருமார் ஒன்றியம் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தைப்பொங்கல் தினத்தையொட்டி அந்த அமைப்பு விடுத்த வாழ்த்துச் செய்தியில்,

தமிழர் வாழ்வியலில் நன்றி அறிதலையும், பிறருக்கு கொடுத்து உண்ணும் பழக்கத்தையும் கொண்டு இயற்கையையும், இறைவனையும் போற்றும் திருநாள் தைத்திருநாள் ஆகும். பாடுபட்டு உழைத்த உழவன் தொழிலை பார் போற்றும் உன்னத நன்னாள் ஆகும்.

எவ்வளவு துன்பம் இருந்தாலும் அதையெல்லாம் புறந்தள்ளி புதுப்பானையில் சர்க்கரையும், பாலும், அரிசியும் கொண்டு இத்தினத்தில் பொங்கலோ பொங்கல் என்ற மங்கல நாதத்தை அகிலம் பரவச் செய்யும் கைங்கரியம் தனி சிறப்பாகும், பொங்கல் எப்படி தித்திப்பை மட்டும் தருகிறதோ அதுபோல துன்பத்தில் இருந்து விடுபட்டு இனி நல்வழிபிறக்கும் என்ற நம்புக்கையுடன் இந்த பொங்கலை வீட்டில் தனித்திருந்து கொண்டாடுவோம், வீட்டில் இருந்து இறைவனை வழிபடுவோம். எமக்கான விடியல் தூரத்தில் இல்லை. நம்பிக்கை கொள்ளுங்கள்.

அனைத்து உலக மக்களின் இயல்பு வாழ்வு சுபீட்சம் வேண்டி அன்பே உருவான பரம்பொருளின் பாதம் பணிந்து பிரார்த்தனை செய்து நிறைவான நல்வாழ்த்துக்களையும், நல்லாசிகளையும் மகிழ்வுடன் பகிர்ந்து கொள்கிறோம் - என்றுள்ளது. (ஐ)

# பொங்கல் பொதியுடன் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன

தெல்லிப்பழை பனை, தென்னைவள கூட்டுறவு சங்கத்தால், அதன் அங்கத்தவர்கள் 159 பேருக்கும், பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 8 முன்பள்ளிகளின் 14 ஆசிரியர்களுக்கும் பொங்கல் பொதிகள் நேற்று வழங்கப்பட்டன.

ஒவ்வொருவருக்கும் ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான பொங்கல் பொதியுடன் 500 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்களும் சங்கத்தின் நாட்காட்டியும் வழங்கி வைக்கப்பட்டன.

வருடந்தோறும் இந்த பணியை சங்கம் முன்னெடுத்து வருகின்றது என்று அதன் தலைவர் நா.கணேசன் தெரிவித்தார். (ஐ)



அருந்ததி
இணைய திருமண சேவை

| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
| --- | --- |
| 14688 \| வே \|1974<br>Divorced\|யாழ்ப்பாணம்\| இந்து<br>Lecturer\|Sri lanka \|<br>அவிட்டம்(மகரம்)\|165செ.மீ | 14568\| வே \|1974<br>உரும்பிராய்\| இந்து<br>Senior Manager \| Sri lanka \|<br>கேட்டை(விருச்சிகம்) \|167செ.மீ |
| 14149 \|வே \|1977<br>வேலணை\| இந்து<br>Business \|Uk\|சூ.செவ் : 02<br>திருவாதிரை (மிதுனம்)\| 167செ.மீ | 14463 \| வே \|1981<br>கொக்குவில்\| இந்து \| Sri Lanka\|<br>Marketing manager\|செவ் : 04<br>ஆய்யிலியம்(கடகம்)\|164செ.மீ |
| 14369\| வே\|1979<br>புங்குடுதீவு\| இந்து\| Uk \|<br>Store Supervisor \|சூ.செவ் : 05<br>பூசம் (கடகம்) \|176செ.மீ | 14107\| வே \|1987<br>காரைநகர்\| இந்து<br>Yoga Instructor\| Sri lanka \|<br>ரோகிணி(ரிஷபம்) \|165செ.மீ |
| 14893 \|வே \|1980<br>வரணி \| இந்து \| செவ் : 04<br>Relationship Manager\|<br>Sri lanka \|பூராடம்(தனுசு)\|176செ.மீ | 14206\| வே \|1988<br>வேலணை\| இந்து \| Sri Lanka\|<br>Assistant Accountant<br>ரேவதி (மீனம்)\| 156செ.மீ |
| 14382\| வே \|1981<br>அச்சுவேலி\| இந்து \|<br>Senior Manager\| செவ் : 07<br>Sri lanka\|திருவாதிரை(மிதுனம்)<br>170செ.மீ | 14348 \| வே \|1988<br>வேலணை \| இந்து \| லக்.செவ்<br>Development Officer\|<br>Sri lanka\|ரோகிணி(ரிக்ஷபம்) \|<br>155செ.மீ |

20, கே.கே.எஸ் வீதி கொக்குவில் யாழ்ப்பாணம்
0777 164 524 www.arunthathee.com

ஈழநாடு
Eelanadu

# இரணைமடுவிலிருந்து அதிக நீர் வெளியேற்றம்

## மக்களை அவதானமாக இருக்க அறிவுறுத்து

கிளிநொச்சி, ஜன. 14

இரணைமடுக்குளத்திற்கான நீர் மட்டம் தொடர்ந்தும் அதிகரித்துவருகின்றது. இந்நிலையில், தற்போது நீர்மட்டத்தின் அளவு 37 அடி 5 அங்குலமாக அதிகரித்துள்ளது. இதனால் நீர் வெளியேற்றப்படும் அளவு அதிகரிக்கும் என்பதால் மக்களை மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்குமாறு அனர்த்த முகாமைத்துவப் பிரிவு அறிவுறுத்தியுள்ளது.

முரசுமோட்டை, கண்டாவளை, ஊரியான் பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயல்படுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, 14 வான் கதவுகள் திறக்கப்பட்டு நீர்வெளியேற்றப்பட்டு வரும் நிலையில் வெளியேறும் நீரின் அளவு அதிகரிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# 8ஆவது நாளாகவும் தேவதாசன் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 14

நேற்று எட்டாவது நாளாகவும் அரசியல் கைதி க.தேவதாசனின் உணவு தவிர்ப்பு போராட்டம் தொடர்ந்தது.

தமிழ் அரசியல் கைதியான தேவதாசன் தான் நிரபராதி என்று நிரூபிக்கவும், பிணை அனுமதி கோரியும் மகசின் சிறையில் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார். அவரது போராட்டம் எட்டாவது நாளாகவும் நேற்று தொடர்ந்த நிலையில், அவரின் உடல்நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும், அவரின் கோரிக்கையை உரிய தரப்புக்கள் ஆவன செய்ய வேண்டும் என்றும் குரலற்றவர்களின் குரல் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

# அரசியல் கைதிகள் விடுதலை வேண்டி மன்னாரில் வழிபாடு

மன்னார், ஜன. 14



தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வேண்டி நேற்று புதன் கிழமை மன்னார் தோட்டவெளி பகுதியில் அமைந்துள்ள வேதசாட்சிகள் ஆலயத்தில் விசேட வழிபாடுகள் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் ஏற்பாட்டில் அதன் மாவட்ட இணைப்பாளர் எஸ். திலீபன் தலைமையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்ப உறவுகள் மற்றும் அரசியல் கைதிகளின் உறவுகள் இணைந்து விசேட வழிபாடுகளை மேற்கொண்டனர்.

சிறைச்சாலைகளில் தற்போது கொரோனா தொற்று பரவுவதன் காரணமாக தமிழ் அரசியல் கைதிகளின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு குறித்து அவர்களின் குடும்பத்தினர் பல்வேறு துயரங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

தற்போது வரை சுமார் 14 தமிழ் அரசியல் கைதிகள் வைரஸ் தாக்கத்துக்கு உள்ளாகி உள்ளனர்.

இலங்கை அரசு 6 ஆயிரம் சிறைக் கைதிகளை விடுவித்திருப்பதையும் தகுதியான இன்னும் பல கைதிகளை படிப்படியாக விடுவிக்க தீர்மானித்துள்ளனர்.

இந்த நிலையில் தமிழ் அரசியல் கைதிகள் மீது கரிசனை கொண்டு அவர்களை விடுவிப்பதன் மூலம் சிறைகளில் பரவிவரும் பெருந்தொற்றிலிருந்து அவர்களின் உயிரைப் பாதுகாக்கும் படி காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய குடும்ப உறவுகளினால் கூட்டுப் பிரார்த்தனை இன்று புதன்கிழமை மன்னார் தோட்டவெளி பகுதியில் உள்ள வேத சாட்சிகள் ஆலயத்தில் சிறப்பு திருப்பலி மற்றும் வழிபாடுகள் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# யாழ்ப்பாணத்தில் 525 குடும்பங்கள் மழையால் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 14

சீரற்ற வானிலை காரணமாக யாழ்ப்பாணத்தில் 525 குடும்பத்தை சேர்ந்த 1,630 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரீ. என். சூரியராஜா தெரிவித்துள்ளார்.

அத்துடன், கடந்த மூன்று நாட்களாகப் பெய்த மழையின் தாக்கத்தால் 66 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

காரைநகர் பிரதேசத்தில் ஓர் இடைத்தங்கல் முகாம் அமைக்கப்பட்டு 14 குடும்பங்களை சேர்ந்த 41 நபர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்றும் கூறினார்.

மேலும், குறித்த பாதிப்புகள் தொடர்பான விபரங்கள் சேகரிக்கப்பட்டு அனர்த்த முகாமைத்துவ பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும், தொடர்ச்சியாக மழையுடன் கூடிய காலநிலை நீடிப்பதன் காரணமாக பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் எனவும் அவர் தெரிவித்தார். (ஐ-3)



# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**

6.00 மணி : மங்கள இசை-மங்கள நாதம்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ் அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : பொங்கலோ பொங்கல்- (பொங்கல் சிறப்பு நிகழ்ச்சி)
11.00 மணி : பட்டிமன்றம்- (பொங்கல் சிறப்பு நிகழ்ச்சி)



**பகல்**

12.00 மணி : எந்த பொங்கல் மாஸ்ரர் பொங்கல் - (பொங்கல் சிறப்பு நிகழ்ச்சி)



1.00 மணி : சோலைக்காட்டு பொம்மை (நேரலை பொங்கல் வாழ்த்து நிகழ்சி)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-நேரலை
5.30 மணி : பாரதி பாஸ்கரின் நகைச்சுவை பேச்சரங்கம்- (பொங்கல் சிறப்பு நிகழ்ச்சி)
6.00 மணி : பொங்கும் இசை (பொங்கல் சிறப்பு நிகழ்ச்சி)



**இரவு**

7.00 மணி : பீனிக்ஸ் சிறகுகள் (பொங்கல் சிறப்பு நிகழ்ச்சி)




8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : பொங்கல் குதூகலம்- (பொங்கல் சிறப்பு நிகழ்ச்சி)
10.00 மணி : யாவரும் கேளீர்

**DAN COMEDY HD**

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
9.00 மணி : கலக்கல் காங்கேயன் நகைச்சுவை பேச்சரங்கம்
10.00 மணி : வருத்தப்படாத வாலிபர் சங்கம் சிறப்பு திரைப்படம்

**பகல்**

12.30 மணி : நகைச்சுவை மன்னன் விவேக்
3.00 மணி : அலெக்ஸ் பாண்டியன் சிறப்பு திரைப்படம்
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கலக்கல் காங்கேயன் நகைச்சுவை பேச்சரங்கம் ( மறுஒளிபரப்பு )

**இரவு**

8.00 மணி : தனி ஒருவன் சிறப்பு திரைப்படம்
11.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை




10.00 மணி : நேரலை

**பகல்**

12.00 மணி : நேரலை
1.00 மணி : நேரலை
2.00 மணி : நேரலை
4.00 மணி : நேரலை
6.00 மணி : நேரலை
7.00 மணி : இசை கொண்டாட்டம்

**கல்வி TV CHANNEL-1**

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் தகவல் தமிழ்
7.00 மணி : க.பொ.த உயர்தரம் கலைப்பிரிவு மாதிரி வினாத்தாள் ஆங்கிலம்

**ஓம் ரிவி**

**காலை**

5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : சின்மய சிந்தனை
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : முற்றத்துப்பொங்கல்
09.00 மணி : யாழ்ப்பாணம் புங்குடுதீவு வீரகத்தி விநாயகர் கோவில் திருவிழா
10.00 மணி : ராசிபலன்
10.30 மணி : திருமூலர் அருளிய திருமந்திரம்
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : யாழ்ப்பாணம் பசுபதிஸ்வரர் சுவாமி கோவில் திருவிழா
6.00 மணி : முற்றத்துப்பொங்கல்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : திருமூலர் அருளிய திருமந்திரம்
08.00 மணி : யாழ்ப்பாணம் புங்குடுதீவு வீரகத்தி விநாயகர் கோவில் திருவிழா

**CHANNEL HOLY MARY**

**காலை**

7.00 மணி : ஆலயப் பாடலகள்
9.00 மணி : ஜெபமாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி : புனித சூசையப்பர் மன்றாட்டு
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**

12.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : பாடல்
4.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
4.30 மணி : திருகோணமலை திருப்பலி

**Pirai Television**

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
12.00 மணி : லுகர் அதான்

**பகல்**

12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.01.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.